5

ஜகன்மோகினி

ஜகன்மோகினி 21வது ஆண்டுமலர்

சுமார் 40 பிரபலஸ்தர்கள் எழுதுவார்கள்.

(விவரங்கள் உள்ளே பார்க்கவும்)

50 படங்களுக்குமேல் வெளியாகும்.

தவிர,

வை. மு. கோ. 62வது நாவல்

"பிரார்த்தனை"

ஷை மலரில் வெளிவரும்.

விலை, சலுகை விவரங்கள் உள்ளே கூபனுடன் காண்க.

உங்கள் பிரதியை உடனே ரிஸர்வ் ...ங்கள்

அபாரமான செலவில் மிக உயர்ந்த முறையில் தயாராகிறது.

நாளது 1—1—44 வெளிவரும்

ரிஸர்வேஷன் கூபன்

இவ்விதழில் வெளியாகியிருக்கிறது.

ஸ்ரீமதி ஆர். கல்யாணம்மாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 8 ... 1944

Vol. 20, No. 9.
SEPT 1943.
சுபானு
ஆவணி

ஆசிரியை—

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

ஸ்ரீ

க்ஷேமலாபங்கள்

மோகினி அன்பர்களுக்கு ஒரு ஆனந்தச் செய்தியைக் களிப்புடன் கூறி அந்த சந்தோஷத்தை உங்களுடன் நானும் பங்கிட்டுக்கொள்கிறேன். என்னப்பன் ஸ்ரீ பார்த்தஸாரதியின் கருணைகடாக்ஷத்தினாலும், ஸ்ரீ பாடலாத்திரி நரஸிம்மரின் பரிபூர்ண கிருபையாலும், உங்களுடைய நிகரிலாத பேராதரவினாலும் நமது மோகினிக்கு நாளது ஜனவரி மாதத்தில் 21-வது ஆண்டு பிறக்கப்போகின்றதென்பது நீங்களறிந்ததேயாகும். சென்ற ஆண்டைப்போல் இம்முறையும் ஆண்டுமலர் வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன்.

ஜகன்மோகினி 21வது ஆண்டுமலர்

நமது வேண்டுகோளுக்கிணங்கி மோகினியிடத்தில் அன்புகொண்டு பல ப்ரபலஸ்தர்கள் மலருக்கு விஷயதானஞ்செய்து மலரை அத்புதமான மணங்கமழும்படிச் செய்ய இசைந்து, அனேகர் இதற்குள்ளாகவே கட்டுரைகளும் அனுப்பித் தமது பரிபூர்ணமான ஆதரவைக் காட்டியிருப்பதற்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலையும் வந்தனத்தையும் செலுத்துகிறேன். இன்னொரு முக்யமான சந்தோஷச்செய்தி. அடியிற் கண்ட ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ளவர்கள் தவிர இன்னும் சில எழுத்தாளர்களும் எழுதுவார்கள். (அடுத்த இதழில் விவரங்கள்.)

I. **இலக்கியம்**—*ஆராய்ச்சி, வியாஸம், வர்ணனை.*

1. கலாநிதி ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா,
2. திவான் பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார், பி.ஏ., பி.எல்.
3. ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.
4. அ. நா. மகரபூஷணம், பி.ஏ., பி.எல்.
5. வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ., பி.எல்.

II. **சரித்திரம்**—*அன்று; இன்று; ஆராய்ச்சி; கதைகள்.*

6. பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், எம்.ஏ.,
7. வெ. க. சௌரிராஜன், எம்.ஏ., எல்.டி.,
8. ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்
9. ஸரோஜா ராமமூர்த்தி
10. எம். எஸ். கமலா
11. கோ. ரங்கநாதன்.

சென்ற மலரைவிட
அதிகமான கட்டுரைகள்
அதிகமான படங்கள்
அபாரமான செலவு.

III. **கற்பனை, நகைச்சுவை, சிறுகதை**—*பல ரகம்.*

12. பேராசிரியர் ராவ் ஸாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி,எல்.,
13. ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி. எல்.,
14. "கோனஷ்டை"
15. "பழைய கை"
16. வி. வி. கோபாலரத்னம், பி.ஏ., பி.எல்.,
17. வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.
18. "குகப்ரியை"; 19. "ஸ்ரீரங்கப்ரியா"; 20. "ராணி"; 21. எஸ். அலமேலு

(தொடர்ச்சி ரப்பர் 3-ம் பக்கம்)

வை. மு. கோ. 62-வது நாவல்
"பிரார்த்தனை"
உள்பட ஷை மலர் உங்களுக்கு 1-1-44உ கிடைக்க வேண்டுமாயின் நீங்கள் தாமதிக்காது இப்போதே உங்கள் பிரதிக்கு ஆர்டர் அனுப்பி "ரிஸர்வ்" செய்து கொள்ளவேண்டும்.

ஜகன்மோகினி 21வது ஆண்டுமலர்

ஏனெனில், ஜகன்மோகினி வாசகர்களில் ஒவ்வொருவருக்கும் ஷை பிரசுரம் கிடைக்கும்படியான அளவு பிரதிகள் அச்சிட வேண்டிய பேப்பர் அகப்படாததால், யார் சீக்கிரம் **புது வருஷ சந்தாவுடன் முன்பணமனுப்புகிறார்களோ** அவர்களுக்கே மிகவும் குறைந்தவிலையில் கிடைக்கும். ஏஜண்டு மூலம் ஆர்டர் செய்வோருக்கும் கீழே காணும் திட்டப்படி குறைந்த விலை உண்டு.

குறைந்த விலை திட்டம்

மாதம்	1944-ஆ சந்தாவுடன்	ஏஜண்டு மூலம் அல்லது நேரில்
செப்டம்பர்.	மலர் 1/12 சந்தா 2/4 ரூ. 4/-	மலர்மட்டும் ரூ 2/
அக்டோபர்.	,, 2/- ,, ,, ரூ. 4/4	,, 2/4

———இங்கு கத்தரிக்கவும்———

ரிஸர்வேஷன் கூபன்

பெயர்...

முழுவிலாசம்...

தபால்ஆபீஸ் பெயர்...

மணியார்டர்/போஸ்டல் ஆர்டர் நம்பர்...

ஷை ஆர்டர் [illegible] தொகை. ரூ.............................

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1944
MADRAS

தேதி..................1943 கையெழுத்து

விவரங்கள்.	ரூ.	அ.
21-வது ஆண்டு மலர் (குறைந்தவிலை)		
1944 வருஷ சந்தா		
1943 ஆ சந்தா பாக்கி (இருப்பின்)		

நிபந்தனைகளுக்கு பின் பக்கம் பார்க்கவும்.

1-11-43 முதல் மலர் முழுவிலை 2-8-0க்குத் தான் பதிவு செய்யப்படும்.

மோகினி

அன்பர்களுக்கு

ஓர் அரிய விருந்து

1-1-1944-ல் வெளியாகும் ஜகன்மோகினி 21-வது ஆண்டு மலரில் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் அம்சங்கள்

(1) பல பிரபல எழுத்தாளர்களின் அருமையான கட்டுரைகள் பல துறைகளில் அரிய விருந்தளிக்கும்.

(2) அழகிய சித்திரங்களும், கவர்ச்சி மிகு போடோக்களும் உங்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கும்.

(3) ஒரு முழு நாவல்--வை. மு. கோ. 62-வது நாவல்--"பிரார்த்தனை" முன்பு வெளியான விசேஷப் பிரசுரங்கள் ஆத்ம சக்தி (1940), கருணாலயம் (1941), கலாநிலயம் (1942), க்ருபா மந்திர் (1943) போன்று பல அழகிய கலர்ப் படங்களுடன் கூடிய இனிய நவீனம்.

———————— இங்கு கத்தரிக்கவும் ————————

கூபனை பூர்த்தி செய்யும் விதம்

1. தங்கள் பெயரையும், முழு விலாஸத்தையும் தெளிவாக பெரிய எழுத்துக்களில் எழுதவும். தபால்பீஸ் பெயரை இங்கிலீஷில் ப்ரத்யேகமாகக் குறிப்பிடவும்.

2. 1944 வருடத்திய சந்தாவும், குறைந்த விலை திட்டத்தின்படி ஆண்டு மலரின் க்ரயமும் சேர்த்து பணத்தை போஸ்டல் ஆர்டர்மூலம் "ஜகன்மோகினி" ஆபீஸ், சிங்கப்பெருமாள்கோவில் போஸ்டு என்று ஷை போஸ்டல் ஆர்டரிலே எழுதி, அதை 'க்ராஸ்' செய்து, இந்த கூபனுடன் சேர்த்து அனுப்பவும்; மணியார்டர் மூலம் பணம் அனுப்புவோர் இந்த கூபனைத் தனியாக அனுப்பவும்.

3. ஏஜண்டுமூலம் ஆர்டர் செய்வோர் இந்த கூபனை பூர்த்தி செய்து, பணத்தை ஏஜண்டிடம் கொடுக்கவும்.

நிபந்தனைகள்

1. தங்கள் கூபன் கிடைக்கும் முன்னரே மொத்த பிரதிகளும் பதிவாகிவிடும் பக்ஷத்தில், தங்கள் பணம் திருப்பியனுப்ப நேரிடும்; அல்லது தங்கள் உத்திரவுப்படி அந்த விலைக்கு இதர புத்தகங்கள் அனுப்பப்படும்; அல்லது சந்தா கணக்கில் வரவு வைக்கப்படும். தாமதிக்காது சீக்கிரமே அனுப்பினால் மலரே கிடைக்குமல்லவா? கவனிக்கவும்.

2. 1-1-44ல் தபாலில் ஜனவரி இதழுடன் மலர் "ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்" வாங்கி அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பிய பிரதி தங்களுக்கு கிடைக்காவிடில் நாம் ஜவாப்தாரியல்ல. ரிஜிஸ்தர் போஸ்டு மூலம் அனுப்பவேண்டுமானால் 3 அணா அதிகம் செலுத்தவேண்டும்.

3. கூபனில் கொடுக்கும் விலாசத்திற்கு மலர் அனுப்பப்படும். விலாஸம் மாறும் நேயர்கள் உடனே புதிய விலாசத்தைத் தெரியப்படுத்தவும்; அவ்வாறு தெரிவிக்காது பழைய விலாசத்திற்கு மலர் அனுப்பப்பட்டு தங்களுக்குக் கிடைக்காவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீராமஜயம்.

சுபானு ஹு ஆவணிமீ

செப் 1943

மலர் 20 இதழ் 9

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

Sept, 1943. Vol. 20. No. 9.

பி.ஸ்ரீ

(ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

15. குற்றம் சுமத்துதல்

ஊரிலுள்ள பிள்ளைகள்—ஒருவர், இருவரல்ல—யசோதையிடம் வந்து, "கண்ணன் என்னை அப்படிச் செய்தான்; அவனை இப்படிச் செய்தான்!" என்று குறைகூறி முறையிட்டுக்கொள்ளுகிறார்களாம். யசோதைக்குக் கோபம், கோபமாய் வருகிறது. ஆனால் கண்ணனைக்கண்டதும், அந்த அழகுக்கடலில் கரைந்து போகிறது பொங்கி வந்த கோபமெல்லாம்;

பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்;
எல்லாம் உன்மேல் அன்றிப்போகா(து)! எம்பிரான்நீ இங்கேவாராய்;
நல்லார்கள் வெள்ளறைநின்றாய்! ஞானச்சுடரே உன்மேனி
சொல்லார வாழ்த்திநின்(று)ஏத்திச் சொப்படக் காப்பிடவாராய்!

[பல்=பல, ஆயிரவர்=ஆயிரக்கணக்கானவர், வெள்ளறை=திரு வெள்ளறை என்ற திருப்பதி, சொல் ஆர=சொல் நிறையும்படி, ஏத்தி=ஸ்தோத்திரம் செய்து, சொப்பட=நன்றாக.]

"பஞ்ச லட்சம் குடி" யென்று சொல்லும்படி அவ்வளவு ஜனத்தொகையுள்ள ஆய்ப்பாடியில் துஷ்டப்பிள்ளைகள் பல ஆயிரக்கணக்காக இருக்கக்கூடுமல்லவா? அவர்கள், தாங்கள் செய்யும் துஷ்டத்தனங்களையெல்லாம் ஒரே மூட்டையாகக் கட்டிக் கண்ணன் தலைமேலே சுமத்திவிடுகிறார்களாம்—சுமக்கத்தான் அப்படி ஒரு ஆசாமி இருக்கிறானேயென்று. எனினும் கண்ணன் அவர்கள் இருக்கும் இடங்களுக்கே போய்க்கொண்டிருக்கிறானாம். "என் அப்பனே! என் அரசே! இனி நீ அங்கே போகாமல் இங்கே வா! குற்றம் சுமத்தும் அவர்களை விட்டுவிடு;

பரிவுடன் உன்னை வாழ்த்திக்கொண்டிருக்கும் எங்களிடம் வா'' என்று தாய் கொஞ்சிக் கூப்பிடுகிறாள்.

கண்ணனை நீராட்டித் தலைவாரிப் பின்னிப் பூச்சூட்டியதும், கண்ணன் மறுபடியும் அங்கே ஓடப் பார்த்தான். மறுபடியும் துஷ்டத்தனம் செய்யத்தான். யசோதைக்கா தெரியாது? எனினும், "அவர்கள்தான் துஷ்டப் பிள்ளைகள்!'' என்று குற்றம் சுமத்துகிறாள். இது தாயன்பு—தாயின் 'கள்ளங்கவடற்ற' பட்சபாதம். "குழந்தாய்! நீ நல்லவன், என் பிள்ளை 'ஞானச்சுட'ரல்லவா?'' என்கிறாள். இதுவும் ஒரு சிசுபாலன முறைதான்! அந்த மேனியைப் பார்த்தாலே தெரிந்துவிடுகிறதாம், பிள்ளை 'நல்ல'வனென்றும் 'ஞானச் சுட'ரென்றும். தாயார் கண்ணுக்குத்தானே இப்படியெல்லாம் தெரியும்?

"கண்ணே! குளிப்பாட்டினேன்; குழல்வாரிப் பூச்சூட்டினேன். அழகுச் சுடராய், ஞானச் சுடரா்யிருக்கிறது: கண்ணைப் பறிக்கும் அழகு! கண்ணெச்சில்—திருஷ்டி தோஷம்—வந்துவிடுமோ? குற்றப் பத்திரிகை வேறே படிக்கிறார்கள் என் செல்லப்பிள்ளை மேலே!'' என்றெல்லாம் எண்ணும் யசோதை, ரட்சையாகக் காப்பிடுகிறாளாம்—"உலகத்தையெல்லாம் ரட்சிப்பேன்; சிஷ்டர்களைச் சிட்சிப்பேன்!'' என்று காப்புக் கட்டி வந்திருக்கும் காவற் கடவுளுக்கு—ரட்சக மூர்த்திக்கு, இப்படி அந்திவேளையில் காப்பிட்டு, இரவிலே தன் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு உறங்கிப் போகிறாள்.

விடிய எழுந்து யசோதை வீட்டுவேலைகளைப் பார்க்கப் போகிறாள். கண்ணன் தானும் எழுந்திருந்து தன் வேலைகளைப் பார்க்கப்போகிறான். தன் வீட்டிலும் ஊரார் வீடுகளிலும்தான். அங்கெல்லாம் அவன் பார்த்தவேலைகள்தான் எவை?

ஒரு இடைச்சி யசோதையிடம் வந்து, "அம்மா! உன் மகன் எங்கள் வீட்டிலே வந்து, வெண்ணெயை விழுங்கி வெறுங் கலசத்தைக் கீழே போட்டான். மண்ணிலே அல்ல; கல்லிலே! அந்த ஓசை கேட்பதில் ஒரு சந்தோஷம். இப்படி ஒரு கல்வி கற்றிருக்கிறான் கண்ணன்!'' என்று அந்தக் கைவரிசையை விரித்துரைக்கிறாள்.

வேறொரு ஆய்ச்சி—வயதானவள்—வந்து, "உருக்க வைத்திருந்த வெண்ணெயை அது உருகி நெய்யாவதற்கு முன்னமே உறிஞ்சிவிட்டான் தாழியோடே! யார்? சொல்லவாவேணும்? உன் செல்லம்தான், அசோதாய்! தாழியையும் உடைத்துவிட்டான், அம்மா! உடைத்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போல் என் அருகே வந்து நிற்கிறான். என்ன தைரியம்! என்ன செல்லம்!'' என்கிறாள்.

"யசோதைப் பிராட்டி! பிராட்டி!'' என்று கூவிக்கொண்டே ஓடிவருகிறாள் இன்னொரு ஆய்ச்சி, "பாலைக் கறந்து அடுப்பில் ஏற்றிவைத்தேன் காய்ச்சுவதற்காக. பிறகு மேலண்டை வீட்டுக்கு நெருப்பு எடுத்து வரப் போனேன். அங்கே கொஞ்ச நேரம் நின்று பேசிக்கொண்டிருந்து விட்டேன், அம்மா! அதற்குள்ளே உன் மகன் அந்தக் காய்ச்சாத பாலைச் சாய்த்துப் பருகிவிட்டான். நான் இங்கே வரும்போதுகூட அவன் அங்கேதான் நின்றான். கூப்பிட்டுத் தண்டிக்கவேணும், இனிமேலாவது அப்படியெல்லாம் துஷ்டத்தனம் செய்யாதபடி'' என்று முறையிட்டுக்கொள்ளுகிறாள்.

இன்னும் ஒருத்தி வருகிறாள். "நோன்புக்குப் பாயஸ பட்சணங்கள் தயார் செய்து வைத்திருந்தேன்; திரட்டுப்பாலை வைத்திருந்தேன். தேவபூஜைக்கு முன்னமே விழுங்கிவிட்டான், அம்மா! என்ன பிள்ளை! என்ன பிள்ளை வளர்ப்பு!'' என்று ஆர்ப்பாட்டம் செய்கிறாள்.

"சீடை எள்ளுண்டை லட்டு எல்லாம் பாத்திரங்களிலே வைத்திருந்தேன். அத்தனை கலங்களும் காலி! இவனே ஒன்றும் அறியாதவன்போல் இங்கே வந்துவிட்டான்!'' என்று முறையிட்டுப் போனாள் ஒருத்தி. கண்ணனோ மறுபடியும் அதே வீட்டுக்குப் போய், "உறியில் வெண்ணெய் இருக்கிறதோ?'' என்று சோதனை போட்டுப் பார்த்தானாம். எனவே அந்த ஆய்ச்சியும் மறுபடி வருகிறாள்

யசோதையிடம், குற்றப் பத்திரிகை சகிதம். "உன் மகனைக் கூப்பிடு, கூப்பிடு!" என்று சொல்லிக்கொண்டே வருகிறாள்.

இதோ ஒருத்தி கண்ணனுடைய கபட நாடகங்களில் ஒன்றை எவ்வளவு நாடகத்திறமையோடு வெளியிடுகிறாள்,யசோதைக்கு!"அம்மா ! சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது. உன் பிள்ளையோ என்றால்..." என்ற பீடிகையோடு இந்த நாடகம் ஆரம்பமாகிறது. உள்ளபடியே கோபம்தான் யசோதைக்கு, "அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் இவளும் வந்துவிட்டாளே !" என்று. "அப்படி என்ன செய்துவிட்டான், நீ இவ்வளவு பிரமாதப்படுத்த ?" என்பது யசோதையின் முகபாவம். வினைக்குறி, வியப்புக்குறி, கோபக்குறிகளெல்லாம் இப்போது அந்த முகத்திலே.

"எங்கள் வீட்டுக்கு வந்தான். என் மகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டான். கையில் வளையைப் பார்ப்பதுபோலக் கழற்றிக்கொண்டான் !" என்று சொல்லும்போதே யசோதைக்குக் கோபம் அதிகரிக்கிறது. அவன்பேரிலா ? அவள் பேரில்தான் !

நாடகம் தொடர்ந்து நடக்கிறது. "காடுகளிலிருந்து நாவற் பழங்களைச் சேரித் தெருக்களில் கொண்டு வந்து விற்றாள் ஒரு பெண். அந்தப் பெண்ணிடம் இந்தப் பெண்ணின் கைவளைகளைக் கொடுத்து நல்ல நாவற்பழங்களாகப் பொறுக்கத் தொடங்கினான் கண்ணன்" என்று சொல்லிக்கொண்டேபோனாள், யசோதையிடம் வந்தவள். யசோதைக்கு ஆத்திரம்: "கதை முடிந்ததல்லவா ?" என்பது முகபாவம். "அதுதான் இல்லை!"யென்று மேலேபோகிறாள் வந்தஆய்ச்சி.

"போரும், போரும் பழங்கள் அந்த வளைக்கு !" என்றாள் நாவற்பழம் விற்றவள். "போராது, போராது !" என்பது கண்ணன் கட்சி. "இப்படி விவாதப் படும்போது நான் சத்தம் கேட்டு அங்கே போனேன். நாவற்பழக்காரியிடம் என் பெண்ணின் வளையைக் கண்டேன். நான் ஒன்றும் கேளாதிருந்தும் கண்ணன், 'இந்த வளையை நான் திருடவில்லை !" என்று தானாகவே சொன்னான்" என்றாள் கோபிகை.

"இல்லை யென்று அவனே சொல்லிவிட்டால் நம்பவேண்டியதுதானே ! கண்ணன் பொய் சொல்வானா ?" என்பது யசோதை முகபாவம். ஆனால் அந்த ஆய்ச்சியோ, "கண்ணன் அப்படிச் சொல்லித் தன் திருட்டுத்தனம் வெளியானதைத்தானே அறிந்துகொண்டு, 'ஓ, மோசம் போனேமே !' என்று சிரித்தான்" என்று அந்த நாடகத்தைப் பூர்த்தி செய்தாள்.

யசோதைக்கும் சிரிப்பு வந்துவிட்டது. குற்றம் சுமத்திக்கொண்டிருந்த ஆய்ச்சியும் சிரித்துவிட்டாள். அப்போது பக்கத்திலே அவர்களுக்குத் தெரியாமல் வந்து நின்றுகொண்டிருந்த கண்ணனும் சிரித்துவிட்டான்.

"இப்படித்தான் சிரித்தான் அப்போதும்"என்றாள் ஆய்ச்சி, "நான் திருடனா? அம்மா !" என்று தாயாரிடம் கேட்டான் கண்ணன். "இப்போது ஏன் சிரித்தாய் ? கண்ணே !' என்று அவள் கேட்க, "என் கதையை இவள் எவ்வளவு அழகாக—எவ்வளவு ரஸமாக—ச் சொல்லுகிறாள் ! அந்தக் கதையிலே இவளுக்குத்தான் என்ன பிரேமை !" என்று மறுபடியும் சிரித்தான் கண்ணன்.

இப்படிப்பட்ட கிருஷ்ண லீலைகளைக் கோபிகைகள் எவ்வளவு ஆசையோடு அனுபவித்துப் பேறு பெற்றார்கள்; கிருஷ்ண பக்தரானார்கள் ! பெரியாழ்வார் போன்ற பக்தமணிகளும் மனோபாவ உலகிலே கோபிகைகளாகிப் பக்தி பண்ணினார்கள்; பாக்கியசாலிகள் ஆனார்கள். இந்த லீலா சுகத்தைக் கவியுள்ளம் படைத்த ரஸிகர்கள் இந்தக் காலத்திலும் அனுபவிக்கலாம்; எந்தக்காலத்திலும் அனுபவிக்கலாம். ரஸிகர்களும் பாக்கியசாலிகள்தான்.

சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்

இவ்வருட ஆரம்பத்தில் ரூ. 1—8—0 அனுப்பிய நேயர்கள், இவ்வாண்டு முடிவுவரை சஞ்சிகையைப் பெற இன்னும் 10 அணா செலுத்த வேண்டியிருப்பதால் அதை உடனே அனுப்பக் கோருகிறோம்.

ஸ்ரீ. P. R. ராஜசூடாமணி.

பழைய நினைவுகள்

நினைக்கும் பழைய நினைவுகள்—எனை
நிதமும் மயக்கி எழுப்பிடும்;
தினைக்கும் சிறிய செயல்களைப்—பெரும்
பனைக்கும் பெரிதாய்ச் செய்திடும்.

சிறிய வயதில் நினைத்தவை—மிகச்
சிறந்த படம்போல் வரைந்திடும்;
நிறமும் உயிரும் அளித்தொரு—பழம்
நினைவில் களிக்கச் செய்திடும்.

சிறிய வயதில் வளர்ந்ததும்—அரும்
திறமை விளங்கப் புரிந்ததும்,
அறியும் அளவிற் கதிகமாய்—அவை
அனைத்தும் நினைக்கச் செய்திடும்.

அரிய பெரிய சாகசம்—ஊர்
அறியப் புரிந்து நடந்ததும்,
தெரியும் தொழிலும் திறமையும்—மிகச்
சிறப்பாய் நினைக்கச் செய்திடும்.

தவறி நடந்த நடத்தையும்—உற்ற
தடையும் பிணியும் வறுமையும்,
அவலமான காலமும்—உள்ளம்
அதிர, நினைக்கச் செய்திடும்.

இழந்த சிறந்த தருணமும்—உடன்
இயற்ற மறந்த கடமையும்,
அழிந்த பொருளும் நிலைமையும்—எண்ணி
அழுது புலப்பச் செய்திடும்.

வருஷம் முடியும் பொழுதினில்—மனம்
மகிழக் கிடைத்த நலங்களும்,
வருந்த நிகழ்ந்த விஷயமும்—எந்த
வருஷமும் எண்ணச் செய்திடும்.

"மதுர கீதம்" ஆரம்பம் முதல்

சந்தாதாரராகச் சேர விரும்புவோர் ரூ. 1-14-0 முன் பணமனுப்பவும். (மார்ச் முதல் டிஸம்பர்வரை 10 இதழ்கள் 3 அணு வீதம்.)

இந்த சஞ்சிகையின் தொடர்ச்சி

உங்கள் ஊரில் கிடைக்காவிடில் உடனே அணு 9 மணியார்டர் அனுப்பினால் டிசம்பர் முடிவுவரை அனுப்பப்படும்.

ஸ்ரீமான். கோ. ரங்கநாதன்

தியாகி ஸாம்யமராய்

சரித்திர சிறுகதை

போர்க்களம். இரத்தம் சிறுசிறு ஓடைகளாக ஓடிக்கொண்டிருந்தது. இரு புற சைனியங்களும் வெற்றிமாலை சூட பொருதிக்கொண்டிருந்தன. தலைகளும், தலையற்ற முண்டங்களும், கால்களும், கைகளும், ஆயுதங்களும், பிணங்களும் சிறுசிறு குன்றுகள்போல குவிந்துகிடந்தன. ஓர் புறம் சேனைக்குப்பின்னல் இருவர் மூர்ச்சையுற்று, பிணக்குவியல்களின் ஊடே கிடந்தனர். அவர்கள் இருவருக்கும் இடையில் சில அடி தூரமே இருந்தது. இருவரும் வீராதிவீரர்கள்; அஞ்சா நெஞ்சுடையவர்கள் என்பது தெற்றென விளங்கியது. அவர்களில் ஒருவர் சக்கிரவர்த்தி; மற்றொருவர் அவரது சேனதிபதிகளில் ஒருவர். முதலவர் பெயர் மஹாராஜ **பிருதிவிராஜ்**. பின்னவர் பெயர் **ஸாம்யமராய்**. மஹாராஜாவுக்கு ஆழ்ந்த காயங்கள் பலபட்டிருந்தன. ஸாம்யமராயின் இரு முழங்கால்களும் வெட்டப்பட்டிருந்தன.

2

அந்த காலத்தில் இந்தியாவில் பல இரஜபுத்திர ராஜ்யங்கள் தோன்றியிருந்தன. அவைகளுள் தில்லி ராஜ்யம்தான் பிரதானமாயிருந்தது. தில்லியை பிருதிவிராஜ் ஆண்டுவந்தார். பிருதிவிராஜைப் பற்றிதான் சரித்திரம் நமக்குத் தெரிவிக்கிறதே. ஸாம்யமராய் மஹாராஜாமேல் மிக்க அன்பும், விசுவாசமும் உள்ளவர். அவர் மஹாராஜாவுக்காக தனது இனிய உயிரையும் எச்சமயத்திலும் இழக்கத் தயாராயிருந்தார்.

கனோஜை **ஜயசந்திரன்** ஆண்டுவந்தான். **கோரீயை** அழைத்து பிருதிவிராஜை அழித்து, தன்னையும் அழித்து, தேசத்துரோகி எனப் பெயர் பெற்ற ஜயசந்திரன்தான் அவன். அவன் மகள்தான் சம்யுக்தை சம்யுக்தையும், பிருதிவிராஜும் பரஸ்பரம் ஒருவர்மேல் ஒருவர் காதல்கொண்டிருந்தனர். சம்யுக்தையின் சுயம்வர மண்டபத்தில் எல்லாதேச அரசர்களும் கூடியிருந்தனர், பிருதிவிராஜைத் தவிர. பிரிதிவிராஜ் மாதிரி ஓர் உருவம் செய்து வாசலில் வைத்தான் ஜயசந்திரன். பொருமைத்தீ அவனை அவ்வாறு செய்யத்தூண்டியது. மாலையுடன் தோன்றிய மணமகள்—சம்யுக்தை, எல்லா அரசர்களையும் பார்த்துக்கொண்டே சென்றாள். தனது காதலனைக் காணமல் கலக்கமுற்றாள். என்றாலும் (பிருதிவிராஜன்) பொம்மை கண்ணில் பட்டது. சூட்டிவிட்டாள் மாலையை அதற்கு. பிரிதிவிராஜ் பொம்மையின் பின்னாலேயே ஒளிந்திருந்தார், குதிரையைச் சற்று தள்ளிநிறுத்திவிட்டு. சம்யுக்தை தன்னை இகழச் செய்யப்பட்ட பொம்மைக்கே மாலை சூட்டுவாள் என எவ்வாறுதான் அறிந்தாரோ? சம்யுக்தையுடன் குதிரையின்மேல் தாவி ஏறி இமைப்பொழுதில் சென்றுவிட்டார் மஹாராஜா. ஒருகணத்தில் நடந்த இவற்றைக் கண்டு சபையோர் திகைத்துவிட்டனர். சிலர் காதலர் இருவரையும் போற்றினர். சிலர் பிரதிவிராஜ்மேல் விரோதங்கொண்டனர். தங்களை மதியாமல், மணப்பெண்ணை தாங்கள் மணக்கலாமென்றிருக்க தூக்கிச் சென்றுவிட்டாரல்லவா? என்றாலும் அவரைப் பின்தொடர ஒருவரும் துணியவில்லை.

சுயம்வர நிகழ்ச்சியால் பிரிதிவிராஜிடம் விரோதங்கொண்டவர்களில் ஒருவன் **மஹோபா** இராஜ்யத்தை ஆண்ட **பாமால் ராஜா** மஹோபா ஓர் சிறு ராஜ்யம் பாமால் ராஜாவிடம் **ஆல்ஹா, ஊதல்** எனப் பெயர்கொண்ட இரு சகோதரர்கள் சேனதிபதிகளாயிருந்தனர். ஒவ்வொருவரும் ஸாம்யமராயை ஒப்பர் என்றால் அவர்கள் எத்தகைய வீரராய் இருந்தல்கூடும். சுருங்கக்கூறுவோமாயின், ஆல்ஹா, ஊதல் ஆகிய இருவராலேயே பாமால் மஹோபாவை ஆண்டுவந்தான். அவர்கள் இருவர் மேல் அதிக நம்பிக்கை கொண்டிருந்தான் பாமால் ராஜா.

தில்லி சக்கரவர்த்தியின்மேல் உள்ள துவேஷத்தினல், அவரை அடிக்கடி இகழ்ந்தான்; அவரது குடிகள் தன் தேசத்தில் வந்தால் கொடுமையாக நடத்தினன்; அவரது தேசப் பொருட்களைக் கைப்பற்றினன். எல்லா அதிகாரமும் தன் தேசத்தில்தான். தில்லிமேல் படையெடுப்பதென்ருல் பாதிபிராணன் போய்விடுமே! பார்த்தார் மஹாராஜா; அயோக்கியத்தனத்தைச் சகிக்கமுடியவில்லை. ஓர் ஓலை அனுப்பினர்.

தில்லி,

17–8–.........

இதனல் பரமால் ராஜாவுக்கு அறிவிப்பதென்னவெனில், உமது அயோக்கியத்தனம் அதிகரித்து விட்டதாக அறிகிரேம். இனிமேல் அவ்வாறு செய்யமாட்டேன் என்ற வாக்குறுதியும், செய்த காரியங்களுக்காக மன்னிப்பும் வேண்டின் மன்னிக்கிறேன். இல்லையெனில் 1–10... இல் உம் நாடான மஹோபாவின்மேல் படையெடுப்போம் தயாராகுக.

தில்லி சக்கரவர்த்தி பிரிதிவிராஜ்.

ஓலையைத் தூதுவன் கொண்டு சபையின்கண் இருந்த ராஜாவிடம் ஈந்தனன். கடிதத்தைக் கண்டு அச்சமடைந்தான் பரமால் ராஜா. சபையை உடனே கலைத்துவிட்டு ஆல்ஹா, ஊதல் இருவருடன் மந்திராலோசனை செய்யலானன். வெகு நேரம் ஆலோசனை நடந்தது.

"சேனைத்தலைவர்களே, என் செய்வது? நம் எதிரியோ பெரிய வீரன்; பெரிய, பலம்வாய்ந்த, சேனையையுடையவன். அவனது சேனைத் தலைவர்களோ, சூராதி சூரர். அவனை நாம் வெல்லலாம் என்பது ஐயமுடைத்ததே; நீங்கள் உங்கள் முடிவைக் கூறுங்கள்."

"மஹாராஜ்! இருந்தபோதிலும், நாம் மன்னிப்பு கேட்பதென்ருல் அது கோழைத்தனமல்லவா? இழிவான காரியங்களில் தலைசிறந்ததல்லவா அது. பிறர் நம்மை எள்ளி நகையாட ஏதுவாகுமன்ரோ? மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே. போரில் வெற்றியுறுவோம்; அல்லது வீரசுவர்க்கம் அடைவோம். பெண்ணைப் பேடிபோல் தூக்கிச் சென்றவனுக்கு நாங்கள் பாடங்கற்பிப்போம். உத்தரவு அளியுங்கள்."

"சரி, உங்களிஷ்டப்படியே செய்வோம். போருக்கு ஆயுத்தமாகுக."

தூதுவன் சிறையிலடைக்கப்பட்டான். இரு திறத்தாரும் சேனையைப் பலப்படுத்தினர். பிரிதிவிராஜ் மஹோபாமேல் படையெடுத்துவிட்டார். சேனையை ஸாம்யமராய் திறமையுடன் நடத்தினர். யுத்த பேரிகை முழங்கியது. ஆல்ஹா, ஊதல் தலைமையில் மஹோபாவின் சேனை திரண்டு எதிரியை எதிர்த்தது. இரு திறத்தாரும் போர்புரிதல் தொழிலே மேல், மற்ற தொழில்கள் செய்வது இகழ்ச்சி என்று கருதும் இராஜபுத்திரர் அன்ரே? ஆயிரக்கணக்கானவர் இறந்தனர். அநேகர் அவயங்களை இழந்தனர். மூர்ச்சையுற்றனர். பலர் வாட்கள் மின்னலைப் போல் மின்னின. ஆல்ஹாவும், ஊதலும் அநேக எதிரிகள் தலையைக் கொய்தனர். சேனைத் தலைவர்களும் அவர்களால் இறந்தனர். ஆனல் அவர்களுக்கு ஆயுள் நெருங்கிவிட்டது. அவர்கள் வீரத்தைக் கண்டு இருதிறத்தாரும் வியந்தனர். ஆனல் அவர்கள் சுவர்க்க யாத்திரையை ஆரம்பித்துவிட்டனர். ஸாம்யமராயின் கால்கள் வெட்டப்பட்டன; உடம்பில் அநேக காயங்கள் உண்டாயின. மஹாராஜாவும் ஆழ்ந்த காயங்கள் அடைந்தார். இருவரும் மூர்ச்சையடைந்தனர்.

3

ஸாம்யமராய் மூர்ச்சை தெளிந்தார்; கண்களை நாலாபுறம் செலுத்திப்பார்த்தார். போர் மும்முரமாய் நடந்தது. மஹாராஜா மூர்ச்சையுற்ற பக்கம் நோக்கினர். அவர் மூர்ச்சை தெளியவில்லை. பிணங்களைத் தின்ன எண்ணிவந்த கழுகுகள், காக்கைகள் முதலிய பறவைகளில் சில அவரைப் பிணமென நினைத்து அவரைச் சூழ்ந்து வட்டமிட ஆரம்பித்தன. பார்த்தார் சேனதிபதி. அவரது மார்பு 'படபட' என அடித்தது. ஆயிரக்கணக்கானவருடன் போர் செய்யும்போதும் கூடக் கலங்காத ஸாம்யமராய் இப்பொழுது கலங்கிவிட்டார். சிலவினடி தாமதித்

தால் பறவைகள் மஹாராஜாவைத் தின்ன ஆரம்பித்துவிடும். எழுந்திருக்க முயன்றார், முடியவில்லை. கால்கள்தான் வெட்டப்பட்டுள்ளனவே, மஹாராஜாவைக் காப்பாற்ற பரபரப்புடையவர் ஆனார். அநேக உபாயங்கள் செய்துபார்த்தார். முடியவில்லை. கால்கள் இல்லாத, காயங்களடைந்த, ரத்தக்குறைவினால் பலஹீன மடைந்தவர் என் செய்வார்? என்ன செய்தும் மஹாராஜா அருகில் போய்ச் சேரமுடியவில்லையே என ஏங்கினார். பறவைகள் மஹாராஜாவை நெருங்கிவிட்டன. அவர் உயிரே போகிறதுபோல பயமடைந்தார். எனினும் சுத்த வீரரல்லவா? திடசித்தங்கொண்டார். யோசித்தார். ஓர் உபாயம் தோன்றியது. அதனால் மஹாராஜா கட்டாயம் பிழைப்பார். ஆனால்? என்ன நடக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். அவ்வுபாயத்தை ஒருவரும் செய்ததில்லை; செய்யப் போகிறதுமில்லை; நினைக்கவுமில்லை; இனிமேலும் நினையார். அவ்வுபாயத்தினால் அவர் மனது பூரித்தது; காயங்களால் ஏற்பட்ட வலியெல்லாம் தெரியவில்லை. அவ்வுபாயம் யாதோ?

பறவைகள் பிருதிவிராஜை நெருங்கிவிட்டன. ஓர் கழுகு அவர் உடலைக் கொத்த அலகை நீட்டியது. அதன்மேல் ஓர் மாமிசத்துண்டு திடீரென ஆகாயத்திலிருந்து விழுந்தது. அது திரும்பிப்பார்த்தது. மாமிசத் துண்டைக்கண்டு, பிருதிவிராஜ் உடலைக் கொத்த நினைத்ததை மறந்து, மாமிசத்துண்டை தின்ன ஆரம்பித்தது. அதற்குள் பல துண்டுகள் வந்து விழுந்தன. பறவைகள் மாமிசத்துண்டுகளைத் தின்றன மாமிசத்துண்டுகள் வரும் வழியை நோக்கிப் பறந்துவந்தன. ஸாம்யமராய்தான், தனது அருகில் கிடந்த ஓர் ஒடிந்த கத்தியை எடுத்து, தனது மாமிசத்தைத்தான் அறிந்து எறிந்துகொண்டிருந்தார். பறவைகள் ஸாம்யமராயை சூழ்ந்துகொண்டன. பிருதிவிராஜ் பிழைத்துக்கொண்டார். இனி மாமிசத்தை வெட்டி எறிவதை நிறுத்தினால், பறவைகள் பழையபடி மஹாராஜாவைச் சூழ்ந்துகொள்ளும். இன்னும் மாமிசத்தை வெட்டி எறிந்துகொண்டே இருந்தால் தன்னுயிர் நீங்கிவிடும். மஹாராஜாவைக் காப்பற்றுவதா? தன்னைக் காப்பாற்றுவதா? இராஜபக்தி மேலா? தனது உயிர்பக்தி மேலா? மஹாராஜாவுக்காக தன்னுயிரையும் கொடுக்க எண்ணியிருந்தவரல்லவா ஸாம்யமராய்! ஆகையால் மகிழ்ச்சியுடன் தமது மாமிசத்தை வெட்டி, பறவைகளுக்கு ஆகாரம் கொடுத்துவந்தார்.

4

போர் நடந்துகொண்டே இருந்தது. படைகளின் ஆரவாரம் வானத்தை அளாவியது. இருதிறத்துப் படைகளும் தீரத்துடன் போரிட்டன. இரஜபுத்திரர்கள்தான் போர்க்களத்தில் உயிரை விடுவார்களே யன்றி பின்வாங்கமாட்டார்களே. ஸாம்யமராய் தமது வேலையைச் செய்துகொண்டேயிருந்தார். பிரிதிவிராஜ் மூர்ச்சை தெளிந்தார். ஓர் புறத்தில் சண்டை நடப்பதையும், ஓர்புறத்தில் ஸாம்யமராய் தமது வேலையைச் செய்வதையும் கவனித்தார். ஏன் அவர் அவ்வாறு செய்கிறார்? என யோசித்தார். ஸாம்யமராயின் நோக்கம் அவருக்கு விளங்கிவிட்டது, அன்னவரின் ராஜபக்தி அவருக்கு அளவிலா ஆனந்தத்தை ஊட்டியது. தனக்காக தனது உயிரைக் கொடுக்கிற அன்பன் செய்கையால் அவர் கண்களில் நீர் ததும்பிற்று; தேகம் புளகாங்கித மடைந்தது. இதற்காக அவர் தமது சேனாதிபதிக்கு நன்றி செலுத்த விரும்பினார். பேச வாய்திறந்தார். முடியவில்லை. மறுபடியும் மூர்ச்சையடைந்துவிட்டார். ஸாம்யமராய் இதையெல்லாம் கவனிக்கவில்லை. தமது வேலையைச் செய்துகொண்டே இருந்தார்.

5

மஹாராஜா பிரிதிவீ சபையில் அநேக பாவலர் இருந்தனர். அவர்களில் ஒருவர் சந்தபர்தாயி என்பவர். இவரும் மஹாராஜாமேல் பேரன்பு கொண்டவர். போர்க்களத்தில் மஹாராஜாவைத் தேடிவந்த இவர், சேனைகளிடையில் காணாததால் தேடிக்கொண்டே இங்கேவந்து சேர்ந்தார். அவரும் ஸாம்யமராயின் செய்கையைக் கவனித்தார். அது அவருக்கு மிக்க ஆச்சர்யத்தையும், பிரமிப்பையும்

உண்டாக்கியது. அவருக்கு இதன் கருத்து எளிதில் விளங்கவில்லை. பின்னல் மஹாராஜாவைக் கண்டார். உடனே எல்லா விஷயங்களும் அவருக்கு விளங்கிற்று. "இவரன்றோ இராஜ விசுவாசி" என எண்ணிக்கொண்டே, "ஐயா! தாங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினர்.

"பாவலரே! மஹாராஜாவின் ஆகாரத்தால் இவ் உடம்பு ஆக்கப்பட்டுள்ளது. அதனல் இது மஹாராஜாவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. எனது செஞ்சோற்றுக் கடனை இதன்மூலம் தீர்க்கிறேன். கடன் செலுத்தாதது பெரிய பாபமன்றோ? மேலும் இது என் கடமை; எனக்குப் பெருமையையும், மனத்திருப்தியையும் அளிக்கிறதாதலின் இதன்பொருட்டு ஆச்சர்யமடையாதீர். நீங்கள் வந்த சமயம் நன்று. நான் என் கடமையைச் செய்தேன். தாங்கள் தங்கள் கடமையைச் செய்யுங்கள். மஹாராஜாவை உடனே காப்பாற்றுங்கள்" என மொழிந்தார்.

இவரது பதிலைக் கேட்டவுடன் சாந்தபர்தாயி அழத் தொடங்கினர்; ஸாம்யமராயை மிகவும் புகழ்ந்தார். "உலகிலே உம்மைப்போல் இராஜபக்தியுள்ளவர்கள் ஒருவருமில்லை. பிறருக்காக உம் உடலைக் கொடுப்பதிலும் உம்மைவிடச் சிறந்தவரில்லை. இராஜாவுக்காக தம்பியருடன் போர்புரிந்த கர்ணன்தான் உமக்கு நிகரோ? அன்று சிபிச்சக்கரவர்த்தி புருவுக்காக தனது சில துண்டு மாமிசத்தை வெட்டினன். இன்று ராஜாவுக்காக உம் உடலிலுள்ள மாமிசமெல்லாம் வெட்டி உயிர் விடவல்லவா செய்கின்றீர். சிபிதான் உம்மை நிகர்ப்பாரோ? உம் அநித்ய உடம்பு இன்று அழிகின்றது. ஆனல் புகழுடம்பைச் சம்பாதித்துவிட்டீர். அது யுகம் முடியும்வரை இருக்கும். ஆண்டவன் அருள் உமக்குண்டாகுக" என்ருர்.

6

போர் நடந்துகொண்டேயிருந்தது. சாந்தபர்தாயி, ஸாம்யமராயிடம் விடைபெற்றுக்கொண்டு, மஹாராஜாவை தூக்கிச் சென்ருர். மஹாராஜா சாந்தபர்தாயியால் இனி காப்பாற்றப்படுவார். இதற்குள் ஸாம்யமராய் தமது பூரா மாமிசத்தையும் வெட்டிப் போட்டுவிட்டார். ஸாம்யமராயின் நோக்கம் நிறைவேறிற்று; தமது கடமையைச் செய்துவிட்டார். அவர் முகத்தில் சாந்தி நிலவியது. அவரது உயிர் எலும்புக் கூட்டைவிட்டுக் கிளம்பி சுவர்க்கலோகத்தை யடைந்தது. ஸாம்யமராய் இறந்துவிட்டார். ஆனல் அவர் பெயர் இன்றுவரை உள்ளது. அவர் புகழ் சிரஞ்சீவித்தன்மையுள்ளது.

இடம் மாறும் நேயர்கள்

மாத முடிவுக்குள் தமது புதிய விலாசத்தை தெரிவிக்காவிடில் முதல் தேதியன்று பழைய விலாசத்திற்கே சஞ்சிகையை அனுப்ப நேரிடுகிறது. அது அவர்களுக்குச் சேராவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியன்று.

மேலும் சிலர், ஒரு மாத சஞ்சிகை வந்த பிறகு முன் மாதத்தியது வரவில்லையென்று எழுதுகிருர்கள். இம்மாதிரி தவறுதல்களுக்கு, சஞ்சிகையின் விலையை அனுப்பினல்தான் மறுபடியும் சஞ்சிகை அனுப்பப்படுமென்பதைக் கவனிக்கவும்.

நமது நாவல்களின் விலைகள் 1—5—43 முதல்

அதிமாக்க நேர்ந்ததைப் பற்றி மே இதழிலேயே அறிவித்திருந்தும் சிலர் அதை கவனியாமல் பழைய விலைப்படி அனுப்புகிருர்கள். நேயர்கள் தயவுசெய்து புது விலைப்படி முன்பணமனுப்பி தபால் செலவின்றி பெற்றுக்கொள்ளவும். வி. பி. கிடையாது.

பேபர் பஞ்சத்தின் காரணமாக சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை முன்போல அளிக்கமுடியாமைக்கு வருந்துகிறோம்.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாசன்

ஸ்த்ரீ எழுத்தாளர்கள்

8

ஸ்ரீமதி R. கல்யாணியம்மாள்

ஸ்ரீமதி R. கல்யாணியம்மாள் அவர்கள் பிறவித்தமிழரானாலும்கூட, தான் வசித்துவரும் மைசூர் சமஸ்தானத்தில் தன்னலமற்ற அபரிமிதமான சமூக சேவையின் மூலம் புகழ்பெற்று விளங்குகிறார். இவ்வம்மை கலாசாலைப்படிப்பு படித்துப் பட்டம் பெற்றவரல்லாவிடினும், புத்தக வியாசங்கத்தின் மூலமாகவே பரிபூர்ண ஞானத்துடன் விளங்குகிறார். இந்திய சமூகத்தில் பெண்களின் ஸ்தானத்தைப்பற்றி நன்றாக அறிந்தவராய் பொருளாதாரம், ஜனசமூகம் மற்றும் ராஜாங்கத்துறைகளிலும் பெண்கள் எவ்விதத்தில் முன்னேறவேண்டும் என்ற கொள்கையை நன்கு அறிந்தவராய், பெண்கள் முன்னேற்ற விஷயமாக அல்லும் பகலும் உழைத்து வருகிறார்.

கன்னட எழுத்து வன்மையில் திறமையடைந்தவராய், கன்னட இலக்கியத்தின் பண்டைகாலத்துப் பெருமையையும், தற்காலத்திய நிலைமையையும் நன்கு அத்யயனம் செய்தறிந்தவராய் கன்னட இலக்கிய அபிவிருத்திக்காகச் சிறந்த தொண்டாற்றி வருகிறார்.

இவர் பிறந்ததும், வளர்ந்ததும், சமூக ஊழியம் செய்வதும், இலக்கிய சேவை செய்து வருவதும், அனைத்தும் கன்னட தேசத்தில்தான். அதுவும் மைசூர் தேசத்தின் தலைநகரமான பெங்களூரில்தான்.

இவர் மைசூர் சர்க்காரில் அசிஸ்டென்ட் கன்ட்ரோலராகவிருந்த **ஸ்ரீமான் S. ராமஸ்வாமி அய்யங்காரின்** புதல்வி. இவருக்கு பன்னிரண்டாம் வயதிலேயே விவாகமாகி இரண்டு மாதத்திற்குள்ளாகவே வைதவ்யமும் பிராப்தமாய்விட்டது. அப்பொழுதிலிருந்து ஹிந்து விதவைகள் அனுபவித்துவரும் பலவித துன்பங்களையும் அனுபவித்தார். இதனால் இவ்வம்மைக்கு சமூகத் தொண்டிற்கு அவசியமான சிக்ஷணம் கிடைத்ததெனலாம். தமது பதின்மூன்றும் வயதில் III form பரீக்ஷையில் தேறினார். பிறகு படிப்பும் நிறுத்தப்பட்டது. அதன் பிறகு தகப்பனாரின் ஊக்கம், ஆதரவு, அன்பு, சிரத்தைகளினாலும் இவ்வம்மைக்கு பிரபஞ்ச ஞானத்தில் விசேஷ அறிவுண்டாயிற்று. பிறகு பத்திரிகைகளுக்கு சிறந்த கட்டுரைகளை எழுதி அனுப்புவதுடன் தமது 21-வது வயதில் (1913-ம் வருடத்தில்) பெங்களூரில் "**சாரதா ஸ்த்ரீ சமாஜம்**" என்கிற ஸ்த்ரீ சங்கம் ஒன்றையும் ஸ்தாபித்தார். அதில் பெண் கல்வி மற்றும் விதவித கலைகளின் வகுப்புகள் முதலியன திறந்து பெண்கள் சமூக முன்னேற்றத்திற்காகப் பலவிதங்களிலும் தொண்டு புரிந்து வருகிறார். இரண்டொரு வருடத்திற்குள்ளாகவே தற்பொழுது கன்னட தேசத்தில் பெண்களுக்காகவென்றே பிரசுரமாகும் ஒரே ஒரு மாத சஞ்சிகையாகிய "**ஸரஸ்வதி**" என்கிற கன்னட மாதப்பத்திரிகையைப் பிரசுரிக்கத் துவங்கினார். அது அப்பொழுதினின்றும் இடைவிடாமல் ஸ்த்ரீ சமூக ஊழியமும், கன்னட இலக்கிய சேவையும் மிகமேன்மையுடன் செய்து வருகிறது. இவ்

வம்மை முன்னேற்றத்தின் நோக்கத்துடன் பல அழகிய நாவல்களேயும், கட்டுரை களேயும் கன்னட பாஷையில் எழுதிப் பிரசுரித்து, இலக்கியத்துறையில் புகழ் மாலே சூட்டப்பட்டிருக்கிருர். 1935-ல் கன்னட சாஹித்திய பரிஷத்தில் அங்கத் தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரே சமனுய் தொண்டாற்றி வருகிருர், 1932 முதல் மைசூர் அரசாங்க பாடபுத்தகக் கமிட்டி (Text Book Committee) யில் அங்கத்தினராக இருந்து வருகிருர். இவ்வம்மை மைசூர் சமஸ்தான சட்டசபை யிலும், பெங்களூர் நகர சபையிலும், அங்கத்தினராகவிருந்து வருகிருர். மற்றும் பெங்களூர் நகர சபையில் உபாத்தியக்ஷராகவும், பெஞ்சி மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருக்கிருர். இப்பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதிலும் இவர்தான் முதன்முதல் பெண்மணியாவார். தவிர **பெங்களூர் சிவிக் அண்ட் ஸோஷல் ப்ரோக்ரோஸிவ் சோஸைய்டி, தியசாபிகல் சோஸைய்டி, அபலாசிரமம், அனுதாலயம்** முதலிய பல முக்கிய சங்கங்களிலும் அங்கத்தினராக இருந்து சமூக ஊழியத்தில் ஈடுபட்டு வருகிருர். இவரை மைசூர் மாகாண கல்லூரியின் செனட் சபைக்கும் அங்கத் தினராக தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

இவருக்கு சிறு குழந்தைகளிடத்தில் ஓர் அலாதி அன்பும், பற்றும் உண்டு. **"அகில கர்னுடக் குழந்தைகள் சங்கம்"** என்ற பெயரில் குழந்தைகளான அங்கத் தினர்களேக்கொண்ட கன்னடதேச குழந்தைகளுடையதேயான ஒரு நூதன சங் கத்தை ஸ்தாபித்து, வருடத்திற்கொருமுறை குழந்தைகள் மகாநாடு ஒன்றைக் கூட்டி, மிகவும் விநோதமாகவும், வைபவமாகவும் விழா நடத்துகிருர். குழந்தை களின் மனப்போக்கை அறிந்து **"வளரும் பயிர் முளேயிலேயே"** என்பதுபோல் குழந்தைகளின் அறிவிற்குகந்த விநோதமானதும், சுவாரஸ்யமானதுமான அழ கிய உபன்னியாசங்களிலுைம், ஆட்டங்களிலுைம், குழந்தைகளே மகிழ்வித்து. அவரவர்களுக்கு உபயோககரமான சின்னஞ்சிறு புத்தகங்களே அவ்வப்பொழுது பிரசுரித்தும் பாலகிருஷ்ணனின் சேவை புரிந்து வருகிருர்.

இவ்வம்மையின் இலக்கிய சேவையையும் சமூக ஊழியத்தையும் கண்டு வியந்து, மைசூர் மகாராஜாவானவர் இவருக்கு "Public Service Medal" ஐயும் அருளிக் கௌரவித்துள்ளார். இவ்வம்மையினுடையது மிகவும் எளிய வாழ்க்கை. மிகவும் இளகின மனத்தினர், பரோபகாரி, தெய்வ பக்தர். இளம் எழுத்தாள ருக்கு ஊக்கமளித்து உதவுபவர். மிகப் பெரிய பெரிய சபைகளில் அரும் பெரும் உபன்னியாசங்கள் செய்வதில் கைதேர்ந்தவர். சமூகத் தொண்டாற்றுவதிலும், இலக்கிய சேவையிலும் லயித்துப்போனவராய் குடும்பக் காரியங்களே அலக்ஷி யம் செய்யாமல் வீட்டிலும் சிரத்தையுடன் உழைப்பார்.

ஜகதம்பிகை இவ்வம்மைக்கு தீர்க்காயுளேயும், ஆரோக்கிய பாக்கியத்தையும் அருளி, இவரது பொதுநல சேவை மேல்மேலும் ஓங்கி, இவர் பேனு முனேயிலிருந்து இன்னும் அரியகட்டுரைகள் தோன்றச்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

"ஸ்த்ரீ எழுத்தாளர்" என்கிற தலேயங்கத்தை ஆரம்பித்துவிட்டாயே; அதற்கு வேண்டிய சரக்கு இருக்கிறதா! நம் பரந்த பாரதநாட்டில்-அதிலும் தமிழ் நாட்டில்-ஸ்த்ரீ எழுத்தாளர் மிகக் குறைவாயிற்றே! என்ன செய்யப்போகிருய்?...என்று என்னேப் பல சிநேகிதைகள் கேட்டார்கள். நான் தைரியத்தைவிடாமல் "எத்த னேயோ ஸ்த்ரீ எழுத்தாளர்கள் இருக்கிருர்கள். ஏன் இந்த சஞ்சலம்?" என்றேன்.

நம் தமிழ் நாட்டிலேயே பிறந்த பல சகோதரிகள் கன்னட தேசத்திற்குச் சென்று கன்னட பாஷையில் அபாரமான பாண்டித்யம் பெற்று பெரிய எழுத் தாளர்களாக விளங்குவதைக் காணும்போதும் அவர்கள் எழுதிய கதைகளே மொழிபெயர்த்துப் படிக்கும்போதும் நமக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது பாருங்கள். ஏராளமான ஸ்த்ரீ எழுத்தாளர்களிருப்பதால் குறிப்புகளே மாதா மாதம் இரண்டு மூன்ருகச் சேர்த்துதான் போடவேண்டியிருக்குமோ என்றுகூட இப்போது தோன்றுகிறது. இதைப் பார்க்கும்போது என்னேக் கேட்ட நண் பர்கள் சந்தோஷப்படுவார்களென்று நம்புகிறேன். கன்னடக் கதையை மொழிபெயர்த்துதவிய ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸனுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வந்தனத்தையும் செலுத்துகிறேன்.

வை. மு. கோ.

"கடவுள் எங்கே?"

(கன்னடக் கதை)

(மூல எழுத்தாளர்:-ஸ்ரீமதி ஆர். கல்யாணம்மாள்)

(மொழிபெயர்ப்பாளர்:-ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்)

குண்டினால் சுட்டால்கூட, விறியமாட்டாத பீமனைப்போன்ற கட்டுமஸ்தான தேகத்தினனான **முனியன்** நதிக்கிரையான பிறகு **வள்ளி**க்கு திரும்பவும் விவாகமாகவில்லை. அவர்கள் சாதியில் விதவா விவாகம் நிஷேதிக்கபட்டிருக்கவில்லை. வள்ளியின் மனது உறுதியானது. முனியனைப்போன்ற மனிதன் இவ்வுலகில் காணக்கிடைப்பானா? தினமும் வீட்டைவிட்டு வேலைக்குச் செல்லும்பொழுதெல்லாம் "குடிக்க ஜலம் கொண்டா வள்ளி!" என்று அன்பொழுகும் வார்த்தைகளுடன் எவர் கேட்பார்கள்? அத்தனை அன்பு வேறெவருடைய உள்ளத்திலாவது இருக்குமா என்னும் அனுமானம். முப்பது நாற்பது மைல்களுக்கப்புறமிருக்கும் பட்டணங்களில், திருவிழா நடைபெற்றாலும்கூட தன்னை அழைத்துச் சென்றுகொண்டிருந்த முனியனை அவளால் மறக்கச் சாத்தியமாகுமா?

*   *   *   *

ஆலூரின் மஹதீச்வர சுவாமியின்மீது முனியனுக்கு பரமபக்தி. பிரதி தினமும் தான் வேலைக்குப் புறப்படுமுன்னர் அன்றைக்கு செய்யப்போகும் ஒவ்வொரு வேலையையும் நிவேதித்து தன் எல்லாக் காரியங்களும் நிர்விக்னமாய் நடைபெறும்படி அனுக்ரகிக்க வேண்டுமென்று பக்தியுடன் கடவுளின் பாதங்களில் பணிவான். மாலைப்பொழுது நெருங்கியவுடன் திரும்பிவந்து, தான் அன்றைக்கு செய்த வரதியை ஒப்பித்து, தன்னை அனுக்கிரகித்ததற்காக மற்றொருமுறை பணிவான், முனியனுக்கு குழந்தைப்பேறில்லை. கண்டகண்ட தெய்வங்களுக்கெல்லாம் கைவணங்கியாயிற்று; வேண்டிக்கொண்டுமாயிற்று, வெகு நாட்கள்வரைக்கும் அந்த பாக்கியம் கிட்டவில்லை. கடைசிக்கு மஹதீச்வர சுவாமியை பூஜித்து, பிரார்த்தித்து தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும்படி வேண்டிக்கொண்டான், முனியனின் பிரார்த்தனையானது கடவுளின் செவிக்கு எட்டிற்று. கடவுளிற்கு அன்பனானன். அன்றைக்கு சரியாக பத்தாம் மாதம் சுவர்ண பிரதிமையைப் போன்ற புத்திரன் உதித்தான். முனியன்—வள்ளி இருவரின் ஆனந்தத்திற்கோர் அளவில்லை. மஹதீச்வரனுக்கு வேண்டியபடி அர்ச்சனை அபிஷேகங்கள் நடந்தன.

*   *   *   *

182083.

புத்திரன் உதித்ததிலிருந்து முனியனின் நடவடிக்கை சம்பூர்ணமாக மாறுபட்டது, கள்ளுக்கடைப்பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. முட்டை, மாம்சாகாராதிகளை விட்டொழித்தான். வள்ளி தினந்தோறும் குளித்துவிட்டு, பரிசுத்தமாக காய்கறிகளைக் கொணர்ந்து ருசியாக சமைப்பாள். கடவுளுக்கு நிவேதனம் செய்துவிட்டு கணவன் மனைவி இருவரும் சந்தோஷத்துடன் போஜனம் செய்வார்கள். இவனுடைய நடத்தையைக் கண்ட தலையாரி சந்தோஷித்தவனாய் இவனை அதிக ஆதரவுடன் காண்பான்; அல்லாமல் இவனுக்கு வேண்டிய உதவியைச் செய்துகொண்டிருந்ததால் இந்த குடும்பம் துன்பத்தையே அறியாமல் சுகமாகவிருந்தது.

*   *   *   *

"நீசகுலத்தில் உதித்தாலென்ன? அனைவரும் அந்த பரம்பொருளின் குழந்தைகள் அல்லவா? நம்பள் நடை நுடிகளில் காயா, வாசா, மனசா பரிசுத்தமாகவிருந்தால் தேவதேவனின் நல்ல குழந்தையென்று நம்மையும் தன் சமீபத்திற்கு அழைத்துக்கொள்வான். கமலபுஷ்பம் உதிப்பது சேற்றில், அப்படியானாலும்கூட அந்த புஷ்பமானது பரமாத்மனின் அன்பிற்குகந்த வஸ்துவல்லவா? மகாலட்சுமியின் வாசஸ்தலமாகவில்லையா? முக்கியமானது சாதியல்ல,

அந்தரங்கசுத்தி, பரிசுத்தி நியாயமாக நடப்பது இவைகள்தான் பரம்பொருளை அடைவதற்கு சமீபமான வழி,'' என்று முனியன் உபதேசம் செய்தவாறு நின்றால் அனைவரும் "மகா புருஷன்'' என்று கொண்டாடுவார்கள்.

* * * *

ஒருநாள் காலை பத்துமணி சமயம், முனியன் மகனுக்கு "ஒன்று, இரண்டு, மூன்று'' என்று கணக்கு சொல்லிகொடுத்துக்கொண்டு நதிக்கரையின்மீது உட்கார்ந்திருந்தான். நதி ஸ்நானத்திற்கென்று வந்திருந்த உத்தம குலத்துப் பெண்மணி யொருத்தி, ஜலத்தில் மூழ்கியவள் மேலே வரவில்லை. ஸ்நானம்செய்துகொண்டிருந்தவர்களனைவரும் கூக்குரலிட்டார்களே தவிர ஜலத்தில் இறங்கி அந்த பெண்ணை மேலே எடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. முனியன் பார்த்தான்; ஜலத்தில் தாவினன், தாவியவன் மேலே எழும்பவில்லை.

* * * *

சுகமயமான வள்ளியின் குடித்தனமானது அந்தகாரமயமாயிற்று. பதியின் அன்பை நினைத்து நினைத்து வெதும்பினவளாய் வள்ளி, மகன் மாதவனைப் பார்த்துச் சற்று துயரத்தை மறப்பாள், பரம்பொருளிற்கு இதுவும் சகிக்கவில்லை. மூன்று நாட்களாக மாதவனுக்கு விபரீத ஜுரம். கண்ணே திறக்கவில்லை. கேள்வி கேட்டதற்குச் சரியான விடை கிடைக்கவில்லை. பூஜைபோட்டுமாயிற்று; எத்தனையோ வேண்டிக்கொண்டுமாயிற்று. வள்ளி அன்னாகாரமின்றிக் கண்ணீர் வடித்தவாறு புதல்வனின் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

* * * *

மெய்யிருட்டான இரவு, உலகின் ஏற்றத் தாழ்வு என்பதை பரிகாசம் செய்கின்றனவோ என்பதுபோல் அங்கங்கே ஒவ்வொன்றாக நக்ஷத்திரங்கள் மினுமினுப்புடன் பிரகாசிக்கின்றன. நகரத்தின் அந்த பகுதியனைத்தும் நிசப்தத்துடன் கூடியிருக்கிறது. செடிகளின் இலைகள்கூட அசைந்தாடவில்லை. முனியனின் குடிசலில் மட்டும் சிறியதொரு மண் அகல் மினுக்—மினுக் என்று எரிந்துகொண்டிருக்கிறது. அலுப்புடன் தூங்கிக்கொண்டிருந்த வள்ளி திடுதிப்பென்று தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்தாள். வீதிக்கதவைத் திறந்தாள். இந்தப்புறமும், அந்தப்புறமும் கண்ணுக்கெட்டும் தூரம்வரைக்கும் பார்த்துவிட்டுவந்து, படுத்திருந்த குழந்தையின் நெற்றிக்கு விபூதியை இட்டு கடவுளுக்குக் கைகூப்பினாள்.

* * * *

அவள் படுத்திருந்தது கொஞ்ச நேரம். கொஞ்ச நேரத் தூக்கத்தில் அவள் ஒரு சொப்பனம் கண்டாள். செத்துப்போன முனியன் நான்கு வருடத்திற்குப் பிறகு வந்திருக்கிறான். குழந்தையை பத்திரமாக பார்த்துக்கொள்ளும்படிக்கு வள்ளியிடம் சொன்னான், "குழந்தையின் ஜுரத்திற்கு மருந்தொன்றும் வேண்டாம். மஹாதீச்வர சுவாமி கோயிலின் த்வஜஸ்தம்பத்தின் அடியில் குழந்தையைப் படுக்கவைத்து கற்பூர ஆரத்தி செய். குழந்தை சுகமடைவான்' என்று சொல்லிவிட்டு குடிசலைத்தாண்டிச் சென்றாற்போலிருந்தது. அப்பொழுது வள்ளிக்கு விழிப்பாயிற்று.

* * * *

சொப்பனத்தை நினைத்துக்கொண்டு வள்ளி கவலையில் ஈடுபட்டாள். கோயில், கடவுள் அனைத்தும் உத்தம குலத்தினர்களின் சொத்துக்கள். கோயிலுக்கு அப்பால் நூற்றைம்பது கஜத்தின் வரைக்கும் புலையர்கள் நடமாடக் கூடாது. ஒருவேளை யாராவது வழிதப்பி வந்தால்கூட முடிந்தது. அந்த கிராமத்தின் தலையாரியின் வீட்டு முன்புறமுள்ள மரத்தில் அவனைக் கட்டி அவன் உடலின் தோலை உரித்துவிடுவார்கள். ஆனால் நான்கு வருடங்களுக்குப் பிறகு முனியன் தன் குடிசலை தேடிக்கொண்டு வந்துவிட்டுப் போயிருக்கிறான். தன் முதுகுத் தோலைத்தானே உரிப்பார்கள்! உரித்தாலும் கவலையில்லை. குழந்தை பிழைத்தெழுந்தால் அதுவே போதும். மஹாதீச்வரனின் சன்னிதிக்கு குழந்

[illegible]தயை அழைத்துச் செல்லாமல் குழந்தை செத்துப்போய்விட்டால் முன்னுக்குக் கதியேது!" என்று வெகு நாழிகை சிந்தித்துவிட்டு கடைசிக்கொரு தீர்மானம் செய்துகொண்டாள்.

*   *   *   *

மூன்றும் நாள் காலை எட்டுமணி சமயம். வெற்றிலை பாக்கை உமிழ்வதற்கென்று கோயிலின் பூசாரி வெளிப்புறம் வந்தான். த்வஜஸ்தம்பத்திற்குக் கொஞ்ச தூரத்தில் புலையஸ்த்ரீ யொருத்தி குழந்தையைக் கீழே படுக்கவைத்துவிட்டு நின்றிருக்கிறாள். என்ன ஆச்சரியமிது! ஆகாயமே சுழன்று தலைமீது விழுந்தாற்போலாயிற்று பூசாரிக்கு. வந்துவிட்டது ரௌத்திராவதாரம். கன்னட வார்த்தையில் கன்னட தேசத்தில் அதெத்தனை வசவுகள் வழக்கத்தில் உண்டோ அத்தனை வசவுகளையும் அந்த மஹாதீச்வரனின் எதிரிலேயே வைதான். அந்த மூர்க்கன் "காந்தி கன்னட தேசத்திற்கு வந்துபோன பிறகே இவர்களை கேட்பாரே இல்லை! இவர்கள் அட்டகாசமே எங்கெங்கும்! இவர்களுக்கு அதெத்தனை கொழுப்பு! இன்னும் இந்த குளிரில் இந்த பச்சைத் தண்ணியில் முழுகிச் சாகவேண்டும். டேய் சித்தா! போய் தலையாரியை அழைத்துவா" என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டான். விழுப்பு, கும்பாபிஷேகம், சம்ப்ரோக்ஷணை, வரும்படி, தக்ஷிணை, இவையனைத்தும் அவன் மனத்தில் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றலாயின.

*   *   *   *

கோயிலின் எதிர்ப்புறம் பெரியதொரு கூட்டம் கூடிற்று. குழந்தையை எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு வள்ளி உட்கார்ந்திருக்கிறாள். தான் செய்தது நியாயமென்றும், அவ்விதம் தான் செய்வதற்கு உரிமை உண்டென்பதும் அவளுடைய அபிப்பிராயம். தன்னை ஆதரிப்பதற்கு சாட்டியொன்று காத்துக்கொண்டிருக்கிறது. அவ்வூரின் தலையாரியானவன் ரௌத்திராவதாரத்தை அடைந்தவனாய் எதிரிலேயே நிற்கிறான்- கல்லும் கரையும்படியான தைன்னியத்துடன் கூடிய ஈனஸ்வரத்தில் வள்ளி தன் விண்ணப்பத்தை விண்ணப்பித்துக் கொண்டாள். 'டேய்! யாரங்கே? இவளுக்கு பித்தம் தலையில் ஏறியிருக்கிறது. மூடு கோயிலின் கதவை. இந்த நாய் எங்கேயாவது கோயிலிற்குள் போய்விடப் போகிறது. ஊருக்குள் சென்று நான்கு ஆட்களை அழைத்துவா" என்று கடுமையான உத்தரவிட்டான் தலையாரி. வள்ளிக்கு அர்த்த சந்திரப் பிரயோகமாயிற்று. கோயிலின் கதவுகள் மூடப்பட்டன.

*   *   *   *

அவ்விடத்தில் இருந்தவன் ஒருவன் சமீபத்திலிருந்த நாய் ஒன்றை வள்ளியின்மீது 'சூ'விட்டான். மற்றொருவன் கற்களை வீசி எறியவாரம்பித்தான். "அய்யோ! ஈச்வரா! இந்த நாயிக்கிருக்கும் மரியாதையும், கௌரவமும்கூட இந்தப் புலையப் பெண்ணிற்கில்லையா? என்னைக் கொன்றுவிட்டாலும் சரி. இந்த குழந்தையை, இந்த என் ஜீவன சர்வச்வத்தை மாத்திரம் காப்பாற்று; காப்பாற்று, காப்பாற்றுங்கள். எனக்கு புத்திர பிக்ஷையைக் கொடுங்கள்," என்று கண்ணீர் வடித்தவண்ணம் அங்கலாய்த்து வேண்டினாள்.

*   *   *   *

ஆட்கள் வந்தார்கள். அவளை பலாத்காரமாக இழுத்துக்கொண்டுபோய் தண்டிப்பது நிச்சயம். அந்த சமயத்தில் "அம்மா" என்று குழந்தை வீறிட்டது. "மஹாதீச்வரா! என் குழந்தையை அநியாயமாக சாகடிக்கிறார்களே!" என்று கல்லும் கரையுமாறு புலம்பினாள். இரண்டுதடவை பெரிதாக சுவாசம் விட்டுவிட்டு குழந்தை பிராணனைவிட்டது. வள்ளி குழந்தையின் நெற்றியை தொட்டுப் பார்த்தாள். அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவளிடத்தில் ஓர்வித மாறுபாடுண்டாயிற்று, அழுவதை நிறுத்தினாள். எழுந்து நின்றாள். அப்பொழுது அவளை யாராவது பார்த்திருந்தால் சாக்ஷாத் மஹாகாளியென்றே பாவித்திருப்பார்கள்.

"இனி இந்த கோயில்கள் எதற்கு! அவைகளை மூடிவிடுங்கள். கடவுளை உங்கள் கைப் பொம்மையாக விருக்கும்பொழுது அந்த கடவுளை உள்ளே வைத்து பத்திரமாகப் பூட்டிவிடுங்கள்! எதிரிலிருந்தால் இந்த அநியாயம் கண்ணில் விழப்போகிறது! எனக்கு இனி இந்த கடவுள் வேண்டாம்—கடவுளின் அருள் வேண்டாம்—என் குழந்தையுடன் நானும் செல்கிறேன். கடவுள் எங்கே? அவன் இல்லாமலிருப்பதினுல்தான் இவ்விதமெல்லாம் நடக்கிறது. கடவுள் எங்கே? எங்கே அந்த கடவுள்?—அந்த கடவுள் எங்கே!" என்று பைத்தியத்தைப்போல் கூவிக்கொண்டே குழந்தையின் பிரேதத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போய்விட்டாள். இந்த வேளைக்கு அவ்விடம் நிறைந்திருந்தவர்களில் ஒருவராவது வாய்திறக்கவில்லை. நிசப்தம்—நீரவம். துக்க மிகுதியால் மனிதனின் கோபம் தணிகிறது. ஆனல் மறுக்கணமே தூர நகர்ந்திருந்த அகங்காரம், கர்வம் முதலிய பூதங்கள் சேர்ந்துகொள்கின்றன.

* * * *

குழந்தையின் சவத்தைப் புலையர்கள் சுமந்து சென்று அந்திமச் சடங்குகளைச் செய்தார்கள். அந்த சேரி பூராவும் அந்த குழந்தைக்காகக் கண்ணீர் வடித்தது. "இந்த பாபத்திற்குப் பொறுப்பு யார்? இந்த தோஷம் எவரைச் சார்ந்தது?" என்னும் கேள்வி அந்த அக்கிரகாரத்திலேயே, ரகசியமாக கேட்கப்பட்டுக்கொண்டிருந்தது, குடியானவர்கள் உன்மத்தம் கொண்ட வள்ளியை அங்காங்கு தேடிப் பார்த்தார்கள்; எங்கும் கிடைக்கவில்லை. ஒருவேளை மேல் உலகத்திற்குச் சென்று கடவுளினிடத்தில் தன் கஷ்டத்தை முறையிட்டுக்கொண்டிருப்பாளென்று தீர்மானித்தார்கள். ஆனல் அவள் சொன்ன "கடவுள் எங்கே" என்ற கேள்விமாத்திரம் அனைவரின் செவிகளிலும் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உண்மைச் சித்திரம் **வை. மு. கோ.**

2 சங்கீத சண்டமாருதம்

கல்யாணங்களுக்குச் செல்வதென்றுலே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் ஓர் தனித்த ஆசையும் உற்சாகமும் உதிப்பதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். அதிலும் வெளியூர்களுக்குக் கல்யாணத்திற்குப் போவதென்றுல் கொண்டாட்டம் கேட்கவேண்டாம். அதிலும் நாட்டுப்புறத்துக் கல்யாணமென்றுலோ, அபாரமான சந்தோஷம். எதனுல் தெரியுமோ! ரயிலில் போகும்போது விளையாட்டு பார்ப்பதைவிட நாட்டுப்புறத்திலுள்ள குளம், ஏரி, கால்வாய், ஆறு, இவைகளில் துளைந்து குளிக்கலாம். மலையுள்ள ஊர்களாயின் ஏறி விளையாடலாம். வயல் காடுகளைச் சுற்றலாம். அழகிய தோப்புக்களையும் துறவுகளையுங் கண்டு களிக்கலாம். மாடு கன்றுகளுடன் விளையாடலாம். உழவர்கள் பாட்டுப் பாடியவாறு ஏத்தம் இறைப்பதை வேடிக்கைபார்க்கலாம். சொந்தக்காரர்கள் தயிர்கடைந்து வெண்ணெயை உருட்டிக்கொடுப்பதை விழுங்கலாம். பட்டினத்தைப்போல் மோட்டாரும் லாரியும் இதர வண்டிகளும் வீதியில் வருமே என்கிற பயமின்றி தெருவில் சுற்றிச் சுற்றிக் கண்ணமூச்சி விளையாடலாம். இதுபோல் ஆசைகள் குழந்தைகளுக்கு உண்டாவது இயற்கை யல்லவா!

அதேபோல் சுமார் 32 வருஷங்களுக்குமுன்பு மேல் சொல்லிய குழந்தையின் உள்ளத்திலிருந்த நானும் எனது சகோதர சகோதரியும் என் தமக்கையின் சாந்திக் கல்யாணத்திற்கு வெளியூர் போகப்போகிற சந்தோஷத்தில் கும்மாளமடித்தோம். இக்காலத்தைப்போல் அக்காலம் நாகரீகப் போர்வையில் மறைந்த காலமில்லையே! இதுபோன்ற கல்யாணங்களுக்கு அடேயப்பா! தடபுடல் செய்துவிடுவார்களல்லவா! நாங்கள் ஒரே பட்டாளமாகக் கிளம்பி ஆனந்தமாக ரயில் ப்ரயாணத்தைத் துடங்கிறேம்.

எனது ஆருயிர்த் தந்தை மகாரஸிகர், வெகு தமாஷ் பேர்வழி. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் எதிரிகளை எதிரிலேயே இறக்கிவிடுவதோடு விரோதமே பாராட்டமாட்டார். சங்கீதத்திலும் அவருக்கு அபாரஞானம், பழயகால சோபனமடிக்கும் அபூர்வ கலையில் அவர் தம்மை மறந்து ஈடுபடுவார். எங்கள் வம்சத்திற்கே சங்கீதத்தில் நல்ல ஞானமுண்டு. அனேகர் வெகு அத்புதமாகப் பாடுவார்கள். என்னுடைய பாட்டியார் இறக்கும்போது 86 வயது. அந்த வயதில் பாடிய பாட்டு இன்னும் என் செவியில் ஒலிக்கிறது. அத்தகைய மதுரகீதத்தை என் தாயாரும் பொழிவாளாம். ஆனால் அதைக் கேட்டு ஆனந்திக்கும் பாக்யத்தை நான் பெறவில்லை.

நாங்கள் வெகு வேடிக்கையும் விளையாட்டுமாக ரயில் ப்ரயாணத்தை முடித்துக்கொண்டு கிராமத்திற்கு வந்துசேர்ந்தோம். நேயர்களே! எந்த க்ராமம் என்று நினைக்கிறீர்கள்? தற்சமயம் ஒருவருஷகாலம் உங்கள் அன்பான மோகினிக்கும் எமக்கும் இருக்க இடந்தந்து உதவிய விராடபுரம் என்று கூறத்தக்க வெங்கடாபுரம் க்ராமந்தான். நீங்கள் மலரில் புகைப்படமாகப் பார்த்தது நினைவிருக்கலாம். எங்களை எல்லோரும் பட்டினத்தார்கள் வந்துவிட்டார்கள் என்றுதான் சொல்வார்கள். தடபுடல் உபசாரங்களுடன் சம்பிரமமாக என் சகோதரிக்கு ருதுசாந்தி நடந்தது. மறுதினம் மாலையில் சம்பிரதாயப்படி தம்பதிகளை மணையில் உட்காரவைத்துப் பாடவாரம்பித்தார்கள்.

அவ்வூருக்குள் வெகு நன்றாகப் பாடக்கூடிய ஒரு அம்மாள் அங்கு ப்ரஸித்தமானவராம். அவரைத்தான் நிறைய பாடச்செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். என் தந்தை உள்பட பல ஆடவர்கள் முற்றத்திலும் ரேழியிலும் நிறைந்திருந்தார்கள். அந்தம்மாளின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவர்கள் ஜம்மென்று பெரிய குரலில் பாடவாரம்பித்தார்கள். உண்மையில் குரலில் ஒரு கடுகளவு இனிமை இருந்தது.

ப்ரோவஸமய...என்கிற கீர்த்தனத்தை எத்தனை சங்கதிகள் சமாச்சாரங்கள் உண்டோ; அத்தனையும் போட்டு பல்லவிபாடி முடித்து உடனே, **பரமதயா...கரசுதுணரீ**... ஈஈஈஈ...இ...இஇஇ என்று தீர்க்கம் பட்டணத்திற்கும் வெங்கடாபுரத்திற்குமாக இழுத்து நீட்டுகிறார்கள். அதிலும் சங்கதிகள் கொட்டியளந்த பின்னர், தவறுதபடிக்கு ப்ரோவஸமய...என்று பல்லவியைத் தொடங்கினார்கள்.

அதுவரையில் வெகு பொறுமையுடன் சமாளித்த என் தகப்பனார் தாங்க முடியாமல் பொக்கென்று சிரித்ததோடு, "பேஷ்! சபாஷ்" என்று ஒருபோடு போட்டார். இந்த சங்கீதத்தின் மர்மம் சிலருக்குத் தெரிந்து கூடச் சிரித்தார்கள். சிலர் திருகத் திருக விழித்தார்கள். என் தமக்கையின் மாமனார் விவரம் புரியாமல் "என்ன சிரிக்கிறீர்களே! என்ன சமாச்சாரம்? யாராவது விழுந்து விட்டார்களா என்ன?" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

அதற்கு என் தகப்பனார், "அடாடா! சங்கீத சண்டமாருதக் கச்சேரியில் மூழ்கி இருக்கும்போது விழவாவது, எழுந்திருக்கவாவது? ஒரே சமயத்தில் இரண்டு கீர்த்தனங்களின் ரஸத்தை அனுபவிக்கும் பாக்யசாலிகள் ஆனந்தத்தினால் சிரிக்கக்கூடாதா என்ன ஸ்வாமீ! குழலால் ஊதித்தள்ளும் இந்த நாகஸ்வரக்காரனால்கூட இப்படி இரண்டு பாட்டை ஊதத் தெரியவில்லையே...**ப்ரோவ** சமய என்று ஆரம்பித்தார்கள். **வரமுலோஸகி**, என்கிற கீர்த்தனத்தின் அனுபல்லவி பாடியாயிற்று. எந்த பாட்டின் சரணம் வருமோ! பார்க்கலாம் இருங்கள், கதம்பகானம் கேட்கலாம்" என்றார்.

இதற்குள் குசமசவென்று பெண்கள் கூட்டத்திலும் இந்த விவரமறிந்து சிரித்துவிட்டதால் அந்தம்மாள் பாவம்...சரணத்தைப் பாடாமலேயே எழுந்தும் போய்விட்டார்கள். சந்தோஷமிகுதியால் இந்த தடுமாற்றம்போலும் என்று நினைத்தார்கள்.

3. விநோத வியாக்யானம்

ஒருநாள் பகல் நாங்கள் அந்தம்மாளின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவரது மாமியார் நிரம்ப வயதான கிழவி. அவர்களுக்கும் சங்கீதத்தில் விருப்பமாம், அந்த பாட்டியம்மாள் என்னைப்பார்த்து "ஏண்டீ பொண்ணே! நீ நன்றா பாட்றயாமே...பெருமாள் பேரிலே நல்லதா ஒருபாட்டு பாடு பார்க்கலாம்," என்றார்கள். இக்காலத்து சில சிறுமிகளைப்போல் எங்களுக்கு பிகுவு செய்யத் தெரியாது. கிழவி கேட்டவுடனே, "வேடலனு கோதண்டபாணி" என்கிற தோடி ராகக் கீர்த்தனையை ஆரம்பித்தேன். கிழவியின் முகம் சுண்டியது "அடீ பொண்ணே!... இந்த கன்னபின்ன பாட்டுகள் எனக்கு வேண்டாம். நல்லதா பெருமாள் மேலே பாடு" என்றாள். எனக்கும் என்னோடு இருந்தவர்களுக்கும் கொல்லென்று சிரிப்புவந்தது, "இது பெருமாள்மீதுள்ள பாட்டுதான் பாட்டி... ராமர் பெருமாளீ இல்லையா!" என்று நான் கேட்டேன். மீண்டும் கிழவி, "ஏண்டீ! கோட்டானட்டும் எனக்கு வயசாச்சு, என்னே ஒன்னும் தெரியாத மூடம் என்று எண்ணி பயித்தியமாக அடிக்கிறயா...பெருமாள்மேலே பாட்டு எதுன்னு எனக்குத் தெரியாதா! வெடலங்காயும் பொடலங்காயும் எனக்கு வாண்டாம். நல்லதா பாடுடீ!... சிறுசா சொன்னத்தே கேக்காதே பெரியவாளே ஏமாத்தறயா?" என்று கடுமையான த்வனியில் கூறினாள்.

உண்மையில் எனக்குக் கோபமும் பரிதாபமும் உண்டாகியது. "அள்ளி அள்ளி நீர் குடிக்கும் பல்லாநீர் ஓடையாம். அற்புதமான மேடையாம்." என்கிற பாட்டை, அடிக்கடி எங்கள் ஊரில் குருவிக்காரிகள் பாடக்கேட்டிருந்தது நினைவுக்குவந்தது. அதைப் பெரிய குரலில் அட்டகாஸமாகப் பாடி சங்கதிகளை தடபுடலாகப் போட்டேன். கிழவியின் தலை ஆடியது. முகம் மலர்ந்தது. எங்க பாட்டியோ, விழுந்து விழுந்து சிரிக்கிறாள். அந்த கிழவி சந்தோஷத்தோடு, "ஆ...பாத்தியா! இதுதான் பெருமாள்மேலே நம்ப பாஷேலே பாட்றபாட்டு. நான் நாட்டுப்புறத்துக் கிழவியானுக்கூட அசடுன்னு நினைக்காதே. இந்த பாட்டு ராமாயண கீர்த்தனையா?...என்றாள்.

என் தந்தையின் குறும்பு நிறைந்த உதரத்தில் ஊறிய பலன் என்னை விடுமா!...உடனே, "பாட்டீ! இது தெரியவில்லையா...ஸ்ரீராம லக்ஷ்மணர்களை விச்வாமித்ரர் யாக சம்ரக்ஷணத்திற்காக அழைத்துச் சென்றபோது ராமலக்ஷ்மணனுக்கு அசாத்ய தாகமெடுத்துக்கொண்டதாம், வெய்யிலில் நடக்கவும் முடியவில்லையாம்; ஐயோ பாவம்! அவா ராஜாபிள்ளைகளோன்னோ! நடந்து வழக்கமேது பாட்டி...தாகம் தாகம்னு தவிக்கும்போது அங்கே ஒரு நல்ல நீர் ஓடை இருந்ததாம். விச்வாமித்திரர் அதனருகில் அவர்களை அழைத்துச் சென்றாராம். அள்ளி அள்ளி அந்த நீரை அமிருதம்போலக் குடித்தார்களாம்.

தாகம் தீர்ந்ததும் ஆயாஸமும் களைப்பும் அதிகமாகிவிட்டதாம். ஓடைக்குப் பக்கத்தில் ஒரு அற்புதமான மேடை இருந்ததாம். அந்த மேடையில் இருவரும் ஏறி உட்கார்ந்தார்களாம். அந்த காக்ஷியைக் கண்டு விச்வாமித்திரர் ஆனந்தப் பரவசமாகி இந்தப் பாட்டைப் பாடினாராம் பாட்டீ!" என்றேன்.

கிழவிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது, "ஆஹா! என்னப்பனே! ராமா!... ராமா!"...என்று பக்தியுடன் கூறி கையைக் கூப்பின காக்ஷி இப்போதும் என் கண்முன்பு தாண்டவமாடுகிறது. அர்த்தம் தெரியாவிடினும் என்ன மூடபக்தி பாருங்கள். அருகிலிருந்தவர்களில் சிலர் இக் கட்டுக்கதைக்குச் சிரிப்பதையும் பாட்டி லக்ஷ்யம் செய்யவில்லை. ஒருவேளை அவள் கண்களுக்கு ஸ்ரீராமன் ஸேவை சாதித்தாரோ என்னவோ! யார் கண்டது? பக்திதானே காரணம்.

நமது நாவல்களின் விலைகள் 1—5—'43 முதல்

அதிகமாக்கியுள்ளதைக் கவனித்து அதன்படி முன்பணமனுப்பி தபாற் செலவின்றி பெற்றுக்கொள்ளவும். வி. பி. கிடையாது.

38

பக்தர் துன்பம் கொய்துகாக்கும் சத்யரூபாபோற்றி
பக்தருள்ளம் கோயில்கொண்ட பத்மநாபாபோற்றி
பக்தருள்ளம் மகிழஇன்ப மழைபொழிந்தாய்போற்றி
சக்தியோடு சிவனும்போற்றும் சத்குருவேபோற்றி.

ரேடியோவின்மீது மனத்தை லயிக்கச்செய்த முரளீதரன் அதைவிட்டு அசையவும் மறந்தான். கண்கள் அவனையறியாது கண்ணீரைக் கக்குவதையும் துடைக்க மறந்தான். தன்னை மட்டுமின்றி உலகத்தையே மறந்தான் என்றாலும் மிகையாகாது.

கிருபாவதியை பதினாயிரம்தரம் தான் பாடச்செய்து இன்பவாரிதியில் மிதந்த அதே பாட்டை இப்போது கேட்கும்போது அவனை எங்கேயோ தூக்கிக்கொண்டு போவதுபோலாகியது. அந்த இன்ப கானம் முடிந்ததும் மேற்குறித்த பாடலை தாளத்துடன் கூடிய ராகமாலிகையாகப் பாடவாரம்பித்ததைக் கேட்டதும் அவனுடைய சோகமும், தான் பெருத்த தவறுதல் செய்துவிட்டதாகத் தோன்றும் ஒரு புதிய எண்ணமும் தடுக்கமுடியாது பொங்கிக் கொந்தளித்தெழுந்தன.

"கிருபாவதி! கிருபாவதி! இதே ரேடியோ கருவிதானே எனக்கு உன்னையும் உன் மதுரகீதத்தையும் அளித்தது. அதே ரேடியோவில் தற்சமயம் வேறு யாரோ பாடுவதைக் கேட்க உன் நினைவே என்னை வாட்டுகிறதே! ஐயோ! நீ எங்கு பயித்தியக்காரியாய் அலைகிறாயோ! பயித்தியமாகவிருந்தாலும் பாதகமில்லை என்று உன்னை வீட்டுடன் வைத்திராதுபோனேனே! உன்னை அக்கினி சாக்ஷியாக கைப்பிடித்தும் கேவலம் மிருக எண்ணத்தின் வேகத்தில் உன்னைக் கைவிட்டுக் கதறச்செய்த பாதகனாகிவிட்டேனே! உன்னை வீட்டிலேயே வைத்திருந்தால் உனக்குத் தெளிவு உண்டாகிய நேரத்தில் உன் மதுரகீதத்தைக் கேட்டு இன்புற்றிருப்பேனே! அதிலும் நானே மண்ணைப் போட்டுக்கொண்டேனே! உன்னை இத்தகைய சோதனைக்குள்ளாக்கியபிறகு, இனி அழைத்தால்தான் வருவாயா! உன் மாமன்தான் அனுப்புவாரா! என் மூளை இப்போது பெற்றுள்ள தெளிவை அப்போது பெறாது இழந்துவிட்டதே. என்ன செய்வேன்?" என்று கதறிக் கண்ணீர் வடிக்கும் சமயம் பேபியும் அவள் அண்ணனும் வந்தார்கள்.

ரேடியோவில் சாய்ந்துகொண்டு புலம்பும் முரளியைக் கண்டதும் பேபிக்கு எங்குமில்லாத எரிச்சலும் கோபமும் வந்தன. வெகு அலக்ஷியமாயும் அல்பமாயும் பார்த்தவாறு, "வெகு அழகாயிருக்கிறது. பட்டம்வந்தால் என்ன! பதவி உயர்ந்தால் என்ன! கௌரவமான முறையில் பழகத்தெரியாத மனிதனுக்கு யார் புத்தி கற்பிக்கமுடியும்? உங்களுக்காகவே விருந்து நடந்தும் கண்ணியத்தை சற்றும் அறியாமல் இப்படியா அவர்களை அவமானப்படுத்துவதுபோல் ஒன்றுக்கும் உதவாத பயித்தியக்காரியை எண்ணி எழுந்து ஓடி வருவது? இதைக் காண எனக்கு வெட்கமாயிருக்கிறதே. நானல்லவா அவர்களுக்குச் சப்பைக்கட்டு கட்டிப் பேசிவிட்டுவந்தேன். இதென்ன வெட்கக்கேடு? இம்மாதிரி பயித்தியக்காரத்தனமாக நடந்தால் எனக்கு மிகவும்கோபம்வருகிறது. வாருங்கள் வெளியே" என்று கூறியவாறு ரேடியோவை டக்கென்று நிறுத்தியதோடு விளக்கையும் அணைத்தாள்.

முரளியை திடீரென்று பார்க்கும் எவரும் அவனையும் பயித்தியமென்று நினைப்பார்களேயன்றி ஒரு பெரிய பட்டதாரி என்று நினைக்கவேமாட்டார்கள். வெறும் நடை-பொம்மைபோல் செயலற்று வந்து படுக்கையில் சாய்ந்தான்.

இரவு முற்றும் எண்ணாததும் எண்ணி மனம் புண்ணாகித் தவித்தானேயன்றி ஒருவிதமான முடிவுக்கும் மனது இடந்தரவில்லை. அன்று பூராவும் படுக்கையோடு படுக்கையாகக் கிடப்பதில் பேபியின் வெறுப்புக்கும் விரோதத்திற்கும் தான் ஆளானானேயன்றிப் பலன் ஒன்றுமில்லை.

பிறகு ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு பேபியிடமும் சொல்லாது நேரில் காரிலேயே சதாசிவத்தின் வீட்டிற்குச் சென்றான். முன்பு கிருபாவதியும், விச்வநாதனும் அடைந்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அடைந்து ஒன்றுமே

தோன்ருமல் தத்தளித்தான். "என் தாயார் கிருபாவதியை மாமனிடம் கொண்டுவிட்டதாகத் தெரிவித்தாளே! இங்கு கிடைக்கும் தகவலிலிருந்து அவர் தேசயாத்திரைக்குப்போயே மாதக்கணக்காகிவிட்டதென்று தெரிகிறதே. இதில் என் தாயாரே ஏதோ சூழ்ச்சி செய்திருப்பதாகத் தெரிகிறதே...என்ன சோதனை?" என்று கலங்கியவாறு நேரே தன் வீட்டிற்கே வந்தான்.

தனது புதிய மனைவியுடன் இன்பவாழ்க்கை நடத்தத் துவங்கியபிறகு ப்ரேமாவை அடியோடு மறந்தேபோனவன் இன்று திடீரென்று வீட்டிற்கு வந்து ப்ரேமாவைப் பார்த்ததும் அவனையறியாத அன்பு சுரந்து ஓடியது. கிருபாவதியின் ப்ரதி பிம்பமாகத் தோன்றும் ப்ரேமாவைக் கட்டியணைத்துப் பலமுத்தங்களிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு உள்ளே சென்ருன்.

தன் மகன் இப்படி திடும்ப்ரவேசமாக வருவான் என்பதைக் கனவிலும் கருதாத பார்வதியம்மாள் சந்தோஷப்பெருக்கால், "வாடாப்பா! முரளீ! உனக்கு இதற்குள் லீவு ஆகிவிட்டதா! பேபி எங்கே? ஏன் உடம்பும் முகமும் ஏதோ ஒரு மாதிரியாயிருக்கிறதே. உடம்புக்கு ஒன்றுமில்லையே!" என்று பெத்த தாயின் பரிசுத்த பாசத்துடன் கேட்டாள்.

முரளியின் மனது கலங்கியிருக்கும் வேகத்தில் தாயாரிடம் சரியாகப் பேசவும் மனம் இடங்கொடுக்கவில்லை. "அப்பா எங்கே?" என்று ஒருமாதிரி கடுத்த முகத்துடன் கேட்டான்.

பார்வதிக்கு இக் கேள்வி சற்று அச்சத்தைக் கொடுத்ததெனினும் சமாளித்துக்கொண்டு, "அப்பாவா?....கிராமத்திற்குப்போயிருக்கிருர்....ஏண்டாப்பா! என்ன விசேஷம்...உனக்குப் பட்டம் வந்த செய்தியை நான் அப்பாவுக்கு அப்போதே எழுதிப்போட்டேன், அதற்குத்தானே கேட்கிருய்...பேபி வரவில்லையா! தாயார் வீடு போயிருக்கிருளா?"...என்ருள்.

முர:—அம்மா! உண்மையை ஒளிக்காமல் சொல்லு. கிருபாவதியை நீ எங்கு கொண்டுவிட்டு வந்தாய்? இதில் எவ்விதமான பொய்யும் வேண்டாம். நடந்ததை நடந்தவாறு சொல்லவேண்டும்...

இத்தகைய கேள்வியை முரளி கேட்கப்போகிருன் என்று பார்வதியம்மாள் சொப்பனங்கூடக் காணவில்லை. இக் கேள்வி அவளை ஒரு முழ உயரம் தூக்கிப் போட்டது. கிருபாவதிக்கு பயித்தியம் இல்லாமலேயே பயித்தியமாக நடித்த ரகஸியம் தெரிந்துதான் இவ்வளவு அதட்டலுடன் கேட்கிருனே! என்றும் நடுங்குகிறது. அவளை நடுச்சந்தியில் தான் விட்ட உண்மை தெரிந்துவிட்டதோ...இப்போது என்ன பதில் சொல்வது" என்று சற்று குழம்பித்துடித்தாள்.

தனது தாமதத்தால் அவன் ஏதாவது நினைத்துவிடப்போகிருனே என்கிற பயத்துடன் சமாளித்துக்கொண்டு "ஏண்டாப்பா! திடீரென்று இவ்வாறு ஒரு வெடிகுண்டை வீசுகிருய்...அந்த பயித்தியத்தை அவா மாமாவிடம் நேரில் ஒப்படைத்துவிட்டுத்தான் தலைவிதியே என்று வந்தேன். ஏன் திடீரென்று உனக்கு இத்தகைய எண்ணம் உண்டாகியது. கிருபாவதியைப் பார்த்தாயா! அவள் மாமனைப் பார்த்தாயா! புதிய விஷயம் ஏதாவது...என்று அடுக்கிக்கொண்டு போவதை முரளியால் தாங்கமுடியவில்லை. அவனை மீறிய கோபம் வந்துவிட்டது.

பல்லைக்கடித்தவாறு, "அம்மா! என்னிடம் விளையாடாதே...இது விளையாட்டுச் சமயமில்லை. நீ இப்போது பொய் சொல்வாயாஞல் காரியம் விபரீதமாக முடியும். நீ கிருபாவதியைச் சத்தியமாக அவள் மாமாவிடமா விட்டுவந்தாய்? அல்லது எங்கேனும் கிணற்றில் குளத்தில் தள்ளிவிட்டு வந்தாயா! என் மூளை கெட்டத்தனத்தின் தீயுடன் உன் உபதேசக் காற்றும் வீசியதால் என் வாழ்நாளே பாழ்நாளாகிவிட்டது. நொடிப்பொழுதில் ஆத்திரப்பட்டுச் சுயபுத்தி இழந்துவிட்டதன்பலன் இது...உண்மையைச்சொல்லு. கிருபாவதியின் மாமா

தேசயாத்திரைபோய் மாதக்கணக்காகிவிட்டதாமே....அவளை எந்த சந்தியில் விட்டுவந்தாய் ?" என்று கர்ஜனை செய்தான்.

கிருபாவதியின் மாமா தேச யாத்திரை போய்விட்ட விஷயம் பார்வதியம் மாளுக்கும் சில தினங்களுக்குமுன்புதான் தெரிந்தது. அதுவே பெரிய அதிர்ச்சி யாயும் திகிலுடனும் இருந்த சமயம் முரளியே நேரில் இத்தகைய மாறுதலுடன் வந்து கேட்பதானது அவள் மூளையே கலங்கிவிட்டதுபோலாயிற்று. கிருபா வதிக்கு உண்மையில் பயித்தியம் இல்லை என்கிற விஷயத்தையும் முரளி தெரிந்துகொண்டுதான் வந்திருக்கிறானென்று எண்ணி என்னபதில் சொல்வ தென்று தெரியாது விழிப்பதைக் காண முரளியின் சந்தேகமும் அதிகரித்தது.

"அம்மா !... ஏன் மழுப்ப யோசனை செய்கிறாய்? விஷயம் பூராவும் எனக் குத்தெரியும். அத்தனையும் இப்போது உன் வாயிலிருந்து வரவேண்டுமென்ற தனால் கேட்கிறேன். உண்மையைச் சொல்லுகிறாயா ! அல்லது வருகிற விபத்தை அனுபவித்துக்கொள்கிறாயா என்று அதட்டும் சமயம் பார்வதியம்மாளின் நிலைமை வெகு தத்தளிப்பாகிவிட்டது. தான் செய்த சதியை சற்றும் எண்ணாமல் தற்சமயம் தான் தப்பித்துக்கொண்டால் போதும் என்கிற எண்ணத்துடன், வெகு தைரியமாகப் பேசத்தொடங்கி, "ஐயோ! நான் என்னடாப்பா செய்வேன்? என் பாழும் பிராணன் போகாமல் இப்படி அவதிப்பட்டலைகிறேனே ! அந்தக் கண்றாவி விஷயம் உனக்குத் தெரியாமலிருக்கவேண்டும் என்று பிரம்ம ப்ரயத் தனம் செய்தேன். என் தலைவிதி அந்த வெட்கக்கேடு உனக்குக்கூட தெரிந்து விட்டதா !" என்று ஒரு பெரிய பாறையைப் புரட்டுவதுபோன்று பேசினாள்.

இதைக்கேட்ட முரளி ஒன்றுமே தோன்றாமல் திகைத்தான். கிணறுவெட்ட பூதம் கிளம்புவதுபோல் இன்னும் என்ன விபரீதங்கள் நடந்திருக்கிறதோ! என்று ஒரு க்ஷணநேரம் தயங்கினான். அடுத்த விநாடியே தான் வந்த வேகத்தின் விரு விருப்பு குறைவதை எங்கே அவள் அறிந்துவிடுகிறாளோ என்கிற எண்ணத் தினால் எதற்கும் சளைக்காத நிலையை அடைந்து, "அம்மா ! இந்த புடலங்காய் புராணத்தின் பீடிகை எனக்கு வேண்டாம். வீணை மழுப்பமுடியாது. உம்... நடந்ததைச் சொல்லு" என்று மீண்டும் அதட்டினான்.

பார்வதி:—அட தலைவிதியே! இந்த வயித்தெரிச்சல் சம்பவத்தை நான் வேறு சொல்லியழவேண்டுமா ! அந்த பாவிப் பெண்ணின் பயித்தியம் உண்மை என்றே நான் நம்பி உன்னுடைய சந்தோஷத்தையும் சுகத்தையும் கோரி கல் யாணத்திற்கும் ஏற்பாடு செய்தேன். நீ அவளை அழகில்லை என்று தள்ளிவிட்ட தால் அவள் உன்மேல் கடுங்கோபம் கொண்டு அந்தப் படுபாவி இருக்கிறானே ! என் குலத்திற்குச் சத்ரு...

முரளி:—(இடைமறுத்து) அது யாரது அத்தகைய பாவி !...

பார்:—பாவியா ! அவனை அம்மட்டுமா சொல்லி நிறுத்துவது, குலத்ரோகி, சண்டாளன், நாகராஜன் இருக்கிறானே அவன்தான். அந்த கிராதகனிடம் கிருபா வதியின் மனது திரும்பிவிட்டதாக்கும். இந்த இழவை யார் கண்டது?...பயித்தி யத்தை மாமாவீட்டிற்குக் கொண்டுவிடப் போனபோது அந்த பயித்தியம் என்னைப் படுத்திவைத்த பாட்டைச் சொல்லிமுடியாது. ஊர்க்கோடியில் போகும் போதே, "நான் எங்கவீட்டிற்குப் போய்விடுவேன். நீ போடீ" என்று கூறிவிட்டு இறங்கி ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

அப்போது அந்த சகுனி மாமாக்காரன் ஊரிலில்லையென்று எனக்குத் தெரி யாதப்பா...இத்தனை கிட்டவந்தபிறகு பயமென்ன போகட்டும் என்று பார்த் தேன். அதோடு என்னுடைய அந்தஸ்துக்கும் உன்னுடைய அந்தஸ்திற்கும் பார்த்து நான் கூடப்போகாமல் வந்துவிட்டேன். பிறகு பராமரியாய் விசாரித்த தில் இந்த நாசகாலி செய்ததெல்லாம் வெறும் நாடகம் என்றும் பயித்தியமாக நடித்தால் தன்னை உடனே வெளியே விரட்டிவிடுவார்கள் என்கிற தந்திரத்தினால் இம்மாதிரியெல்லாம் நம்மை பொம்மலாட்டம் ஆட்டிவிட்டு கெட்ட புத்தியுடன் ஓடிப்போய்விட்டதாயும் நாகராஜனுடன்தான் இருப்பதாயும் விஷயம் தெரிந்து

வயிறு கொதிக்கிறது. நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக லாமா என்றுகூட எண்ணினேன். உலகமறியாத இந்தப் பச்சைக்குழந்தையின் பொருட்டு பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறேன். இந்த அவகேடான விஷயம் உன் காதில் எப்படி எட்டியது ?... என்று பெருத்த மலையைத் தலையில் புரட்டிவிட்டு வெகு புனிதவதியைப்போல் பிலாக்கணம் வேறு பாடவாரம்பித்தாள்.

இந்த பயங்கரமும் விபரீதமும் கூடிய செய்தியைக் கேட்ட முரளியின் நிலைமை எப்படித்தானிருக்குமென்று வர்ணிக்கமுடியுமா ! "என்ன! க்ருபா வதிக்குப் பயித்தியமில்லையா ! பயித்தியமென்று வீணுக நடித்தாளா ! நாகராஜ னிடம் போய்விட்டாளா ! இதெல்லாம் உண்மையா ! ஐயோ ! நம்பமுடிய வில்லையே ! க்ருபாவதிகூடவா இம்மாதிரி செய்திருக்கிறுள் ?... அவள் மனது கூடவா இத்தகைய கேவலத்தில் இறங்கும் ! இதென்ன அனியாய விஷயமாய் இருக்கிறதே !' என்று ஒரு க்ஷணநேரம் தம்பித்துப்போய்க் கலங்கி நிற்பதை யறிந்த பார்வதி, "உம்... கலக்கமென்னடாப்பா இருக்கிறது ? என் வயித்தில் பிறந்ததோஷண்டாப்பா ! தோஷம். அவ்வளவு ஏதற்கு ?... நேற்று இரவு தன் பெயரை மாற்றிக்கொண்டு லக்ஷ்மீபாய் என்கிற புனைப்பெயருடன் ரேடியோவில் பாடின வயித்தெரிச்சலெ என்னுல் பொறுக்கமுடியவில்லையடா ! அகமுடையான் தள்ளிவைத்திருக்கும்போது நல்ல ஒழுக்கமும் சீலமும் குடும்பத்து கண்ணியமும் உள்ள எந்த பெண்ணுவது ரேடியோவில் பாடுவாளா ! இதொன்றே போதாதா ! இவள் கெட்டகேட்டிற்கு ரேடியோ என்னடா வேண்டியிருக்கு ?

அந்த எழவைக்கூட நான் கவனிக்கவில்லை. குழந்தை வெறுமை அழுதது. அதற்காக வேலைக்காரி ரேடியோவை வைத்தாள். அடுத்தக்ஷணம் இவள் பாடு வதைக் காதில் கேட்டுப் புழுவாகத்துடித்தேன். அதைக் கேட்டுத்தான் நீயும் வந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த அவமானம் உன் மனைவிக் கும் அவள் பெற்றோருக்கும் தெரியாதிருக்கவேண்டுமே என்று வேண்டாத சாமியையெல்லாம் வேண்டிக்கொண்டிருக்கிறேன். இந்த வெட்கக்கேட்டை இதோடு மறந்துவிட்டு சிவனே என்றிருக்கும் மனைவியிடம் போடாப்பா ! இதைப் பற்றி யார் கேட்டாலும் பயித்தியத்தைப்பற்றி எனக்கென்ன தெரியும் என்று ஒரே பல்லவியைத்தான் நான் பாடி வருகிறேன். நீயும் அதையே பாடு. அந்த அல்பன் நாகராஜனுல் வந்த தலைக்குக் கொள்ளிதான் இது" என்று மூச்சு விடாது கூறினுள்.

உண்மையில் முரளிக்கு மூளை கலங்கிவிடும்போலவே ஆகிவிட்டது, "நாக ராஜனு இப்படிச் செய்வான் ! கிருபாவதியா இத்தகைய இழிவான துறையில் காலை வைப்பாள் ?" என்று மனத்திற்குள் வாத விவாதங்கள் போராடுகின்றன. தாயாருக்குப் பதிலே சொல்லாது சடக்கென்றுபோய் காரில் அமர்ந்து காரை ஓட்டிவிட்டான்.

பார்வதியம்மாளின் பயம் பின்னும் அதிகரித்தது. "போகிற போக்கில் ஒரு வார்த்தைகூடப் பதில் பேசாமலும், ஒரு வாய் தண்ணீர்கூடக் குடிக்காமலும் போய்விட்டானே ! நேரில் எங்கு போகிறுனே ! இன்னும் என்னென்ன நடக்கப்போகிறதோ !" என்கிற பெருந் திகில் மனத்தில் தீபோல் மூண்டது.

39

நடுநடுங்கிய கிருபாவதி முதலில் செய்வதொன்றும்புரியாது திகைத்தா ளெனினும் அடுத்த விநாடியே தடதடவென்று எழுந்து, அவர்கள் தன் முகத்தைப் பார்க்காதவண்ணம் திரும்பியபடியே மற்றொரு கேட்டின் வழியாக வெளியே போய்விட்டாள். தனக்கு இவ்விடத்தில் ஏதாவது ஆதரவு கிடைக்குமென்று எண்ணி மனப்பால் குடித்தவளுக்குச் சடக்கென்று மனது முறிந்து சப்பிட்டு விட்டது. தன் கணவனுக்கு மாமனாகப் போகிறவருக்கு மிகவும் வேண்டிய வர்கள் என்றுல் இவ்விடத்திலிருப்பது இனி தகாது என்று திட்டமாகத்

தோன்றியதால் உடைந்த உள்ளத்துடன் கால் போன போக்கில் நடக்க வாரம்பித்தாள். எத்தனைதான் மனத்தைச் சமாதானப்படுத்தியும் தன் விதியை எண்ணி வருந்தாமலிருக்கமுடியாது துடித்தபடியே எத்தனைத் தெருக்களைக் கடந்து எத்தனை தூரந்தான் சென்றாளோ! அவளுக்கே தெரியாது. மாலை 5 மணி சுமாருக்கு தாரையும் தம்பட்டமும் உடுக்கையடித்து வர்ணித்துப் பாடுவதும் காதில் கேட்டதும் "இது ஒரு அம்மன்கோயில்" என்று தெரிந்து அதன் வீதியிலேயே நின்று கவனித்தாள்.

ஆடிமாதமாகையால் மகமாயியின் திருநாள் நடக்கிறது. காப்பு இருப்பதால் அம்மன் புறப்பாடாகப்போகிறது. அதற்காக மேள முழக்கம் என்று தெரிந்ததும் ஆவேசங்கொண்டவளைப்போன்ற ஒரு புத்துணர்ச்சியும் மகமாயியினிடம் தடுக்கவியலாத ஒரு வேட்கையும் உண்டாகியதால் தடதடவென்று அம்மன் எதிரில் சென்றாள். அவளையறியாது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டுவந்தது. அம்மனை நமஸ்கரித்து, "தாயே! மகமாயி! எனக்கு எந்த வழியைத்தான் காட்டப்போகிறாய்! என்னை இத்தகைய பரிபவப்படுத்திப் பார்க்க நீ என்ன அத்தனை கல்நெஞ்சினளா! உனக்கு மக்களிடத்தில் தாயன்பு இல்லையா! பச்சாத்தாபம் இல்லையா! உன் பவித்திரமான இதயம் ஈவிரக்கமற்று வரண்டு போய் பாலைவனமாய்விட்டதா! மகமாயித்தாயே!" என்று மனமுருகக் கண்ணீர் பெருக பக்தியால் உள்ளம் குழையக் கதறினாள். அவளையறியாமலேயே,

உலகத்து நாயகியே,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
உன் பாதம் சரண்புகுந்தோம்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
துணி வெளுக்க மண்ணுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
மனம் வெளுக்க வழியில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
பிணிகளுக்கு மாற்றுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
பேதைமைக்கு மாற்றில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
அடைக்கல மிங்குனைப்புகுந்தோம்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!

என்கிற பாரதியாரின் பாடல் அவளது மதுரகண்டத்தினின்றும் எழுந்தது.

அருகிலிருந்தவர்கள் இவளுடைய உருவத்தைப் பார்த்தவுடனே மகமாயி விளையாடியிருப்பதை எளிதிலறிந்தார்கள். அதனால்தான் மகமாயியை இத்தனை உருகித் துதிக்கிறாள் என்று எண்ணி இவளது மதுரகீதத்தை ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டு நின்றார்கள். அக் கூட்டத்தில் ஒரு கிழவிமட்டும் கிருபாவதியை பரிதாபத்துடன் உற்று உற்றுப் பார்த்தாள்.

பாட்டு முடிந்ததும் கிருபாவதி செய்வதறியாது திகைத்துத் திரும்புகையில் அவளருகில் வந்து, "ஏம்மா! உனக்கு மாரியாத்தாள் வந்து எத்தனை நாளாயிற்று" என்றாள்.

கிரு:—உம். எத்தனை நாளானால் என்ன பாட்டி? ஆறுமாதமாகப்போகிறது.

கிழவி:—அடாடா! மகமாயி உன்னிடம் அபாரமாய் விளையாடியிருக்கிறாள் நல்லவேளையாக ஊனம் ஒன்றும் இல்லாது காப்பாற்றினளே! அதுவே உன் பாக்யம். இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. சுமார் ஒரு மண்டலகாலம் இதே கோயிலில் தினம் இரண்டு காலமும் பக்தியுடன் மகமாயித்தாயை ப்ரதக்ஷணம் செய்து உபவாஸம் இருந்து உன் சக்திக்கானவிதம் பூஜை செய்தால்

உனக்கு இந்த வடுக்களும் மறையும், தலைமயிரும் வளர்ந்து விடும். ரூபம் பழயபடி கொஞ்சமாவதுவரும். கண்ணில் பூபட்டவர்கள்கூட இந்த அம்மனுக்குச் சேவை செய்து கண் பெற்றுக்கொண்டு போகிறார்கள். நீ உன் தாயாரையோ, மற்ற யாரையோ அழைத்துவந்து தினம் செய்து வா...பாவம். உன்னைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது'' என்றாள்.

இந்த வார்த்தையை மகமாயித்தாயே நேரில் எழுந்துவந்து பேசுவதாக க்ருபாவதிக்குத் தோன்றியதேயன்றி சாதாரண ஒரு கிழவி பேசியதாகத்தோன்றவேயில்லை. தனக்குப் புகலிடம் காட்டுவதற்காகத்தான் மகமாயி இக் கிழவியை அனுப்பினாளோ!' என்று பூரித்தாள். உடனே அக் கிழவியை நோக்கி, "பாட்டி! எனக்குத் தாயோ, தகப்பனோ! யாருமே திக்கில்லை. கட்டிய கணவன் எங்கே என்று கேட்கலாம். அவனும் என்னை நிராகரித்துவிட்டான். என் போதாக் காலக் கொடுமையில் நான் தன்னந்தனியளாக நின்றிருக்கிறேன். ஏதோ மகமாயித் தாயே நேரில் வந்து சொல்வதுபோல் நீங்கள் சொல்கிறீர்கள். நான் திக்கற்றவளாதலால் எனக்குத் தங்குவதற்கு ஒரு வசதியும் நீங்களேதான் செய்து தர வேண்டும். என்மீது கிருபை செய்யவேண்டும் பாட்டி!'' என்று கெஞ்சும்போது கண்ணில் அருவிபோல் கொட்டியது.

கிழ.—அப்படியா சேதி! நான் நினைத்தபடிதான் ஆகிவிட்டது. உன்னை உன் கணவன் தள்ளிவிட்டானே என்று சந்தேகித்தேன். அட பாவி...அவன் நன்றாயிருப்பானா?...

இந்த வார்த்தை கிருபாவதியின் நெஞ்சை அள்ளிப்பிடுங்கியது. கணவனின் கொடுமையை வெளியிடவும் அவனைத் திட்டவும் அவ்வுத்தமியின் மனது இடந்தரவில்லையாதலால் சடக்கென்று கிழவியை நோக்கி, "ஐயையோ! பாட்டீ! நீ விபரீதமாக எண்ணிவிட்டாயே! என் கணவர் என்னைத் தள்ளவில்லை பாட்டி!... அவர் என்னை இந்த ஸ்வரூபத்தில் பார்க்கக்கூட இல்லை. அவர் பெரிய உத்யோகஸ்தராதலால் சென்ற வருஷம் சண்டையில் உத்யோக நிமித்தம் மாற்றிச் சென்றுவிட்டவர் இன்னும் வரவில்லை. அவர் வருவதற்குள் மகமாயி கிருபையால் சற்று விகாரம் நீங்கவேண்டும் என்றுதான் நான் கோருகிறேன். அவர் சண்டைக்குப்போனது எனக்கு இஷ்டமேயில்லை. என் வார்த்தையை மீறிக் கொண்டு போனதால் நிராகரித்தார் என்று நான் தப்பிதமாகக் கூறிவிட்டேன். அவரை வீணாகத் திட்டவேண்டாம் பாட்டி! இதெல்லாம் என் கர்மம். இதற்கு யாரை நொந்து என்ன பயன்? எனக்கு எங்காவது இருக்க இடம் கிடைத்தால் போதும்'' என்று கெஞ்சிக்கேட்டாள்.

முக்யமாக சில தினங்கள் ஒருவர் கண்ணிலும்படாது தான் மறைவாயிருக்க இடமும் துணையும் கிடைத்துவிட்டால் போதும் என்பது கிருபாவதியின் கோரிக்கை. அம்மனுக்குச் சேவை செய்யும் பாக்யமும் கிடைத்துவிட்டால் பின்னும் சந்தோஷத்துடன் காலத்தைத் தள்ளலாம் என்றதனால் கிழவியைப் பிடித்துக்கொண்டாள்.

கிழவி:—அப்பிடியா சேதி! என் பிள்ளைகூட ஒருத்தன் சண்டையிலே சிப்பாயாபோயிருக்கிறான். நானும் இப்படித்தான் வேண்டாமென்று முட்டிக்கொண்டேன். கேட்கவில்லை. அவன் எங்கிருக்கிறானோ! தகவலே இல்லை. இந்த மகமாயித்தாயிதான் காப்பாத்தவேணும்...அதோ! கோயிலுக்குப்பின்னாலே ஒரு கட்டடம் தெரியுதுபாரு. அந்த கட்டடம் ஒரு சத்திரம், அம்மனுக்கு வேண்டிக் கொண்டு வருகிறவர்களின் சௌக்யத்துக்காக ஒரு மகானுபாவன் கட்டியிருக்கிறான். அதில் நிறைய தனித்தனியான அறைகள் இருக்கு. ஒரு அறையில் நீ இருந்துகொண்டு அம்மனுக்குக் கைங்கர்யம் பண்ணு. இந்த அம்மன்கோயில் பூசாரியும் அவனுடைய வயதான தாயாரும் அதே சத்திரத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் மிகமிக நல்லவர்கள். உனக்குப் பெரிய துணையாயிற்று. அங்கு போய் இடம் கேளு...அதோ அம்மன் புறப்பட்டுவிட்டது. நான் போகிறேன்'' என்றாள்.

கிருபா:—பாட்டீ! உன்னுடைய இந்த பேருபகாரத்தை நான் என்றென்றும் மறக்கவேமாட்டேன். நீ எங்கிருப்பது பாட்டீ! அதைச் சொல்லவேயில்லையே!

பாட்டி:—நான் பக்கத்து கிராமத்திலே இருப்பது. அம்மன் உத்ஸவம் பார்க்கவந்தேன். போய்வருகிறேன்'' என்று கூறியவாறு போய்விட்டாள்.

வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் ஆத்மாவுக்கு அம்மன் கரை காண்பித்ததுபோல் கிருபாவதியின் உள்ளம் பூரித்தது. தன் கணவனுக்கு விவாகமாகி அவன் ஒரு நிலை அடையும்வரையில் இங்கு மறைந்து கிடந்து ஸேவையும் செய்துவந்தால் பிறகு நேரே வீட்டிற்குப்போய் என் கண்மணி ப்ரேமாவை அழைத்துக்கொண்டு கண்ணம்மாளிடம் போய்விடுவேன்'' என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டாள்.

அம்மன்கோயிலைவிட்டு வீதி புறப்பாட்டிற்குப் போனபிறகு கிழவி காட்டிய இடத்திற்குப்போய் சத்திரத்தைச் சுற்றிப் பார்த்துப்பின் தனக்கு சௌகரிய மான ஒரு இடத்தை அங்கிருந்த கிழவியின் உதவியால் அமர்த்திக்கொண்டாள். கையிலோ காலணா காசு இல்லை. உடம்பில் ஒரு குண்டுமணி பொன்னும் கிடை யாது. சாப்பாட்டுக்கு வழி என்ன செய்வது என்கிற கவலையே அவளுக்கு உண் டாகவில்லை. அம்மன் இம்மட்டும் தனக்கு மறைவிடமான இடத்தைக் காட்டி அருள்புரிந்ததே பெரிய சந்தோஷத்தையளித்தது.

சத்திரத்தில் புதிதாக வந்து தங்கும் எவருக்கும் பாத்திரங்கள் வேண்டுமா! என்று வழக்கப்படி கிழவி வந்து கேட்டாள். தனக்கொன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். அப்படியாயின் நீ சாப்பாட்டிற்கு என்ன செய்யப்போகிறாய் என்று கிழவி கேட்டாள். நான் பிரார்த்தனைக்காக வந்திருப்பதால் பத்து தினங் களுக்கு வெறும் மோரோ, பாலோ, பழமோ சாப்பிட்டுவிட்டு ஸேவை செய்யப் போகிறேன். பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்று சமாதானம்சொல்லிவிட்டாள்.

பாலும் பழமும் வாங்க கையில் காலணா இல்லாத பரிதாபத்தைக் கிழவி எங்ஙனம் அறிவாள்? அன்று சாயங்காலம் முதலே பிரார்த்தனை செய்யவாரம்பித் தாள். குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு மடியாயும் பயபக்தியுடனும் பிரதக்ஷண நமஸ்காரம் செய்தாள். அன்று அம்மன் திருவிழாவில் யாரோ ஸேவார்த்திகள் மோரும் வெள்ளரிக்காயும் அங்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்தார்கள்.

இதுவும் அம்மனின் அருள் என்று எண்ணி கிருபாவதி வாங்கிக்கொண் டாள். இப்படியே பத்து நாளைய உத்ஸவமும் வெகு சிறப்பாக நடந்தது. ஏதோ இம்மாதிரி கிடைக்கும் பண்டங்களைப் புசித்துப் பசியாறியதோடு தெரிந்த மனிதர் களின் கண்களில் படாது வெகு நிம்மதியாக இருந்தாள்.

தன் கணவனின் கல்யாணம் இதுவரையில் ஆயிருக்கலாம் என்கிற நம்பிக் கையும் ஆசையும் தலைதூக்கியது. அம்மனின் ஸேவையிலீடுபட்டபிறகு தனது முகத்தில் சிறிது மாறுதல்கள் தோன்றியிருப்பதாயும் தலையில் மயிர் வளர ஆரம்பிப்பதாயும் தோன்றியது. அந்த தோற்றம் அவளுக்குப் பலமான நம்பிக் கையையும் ஸேவையில் பின்னும் பயபக்தி சிரத்தையையும் உண்டாக்கியதால் வெகு அக்கரையுடன் ஸேவையை நாற்பதுநாளைக்கு முடித்தபிறகே தான் பிரே மாவை அழைத்து வரப்போகவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டிருந்தாள்.

அம்மன் கோயிலுக்கு வரும் ஸேவார்த்தி ஒருவர் படித்த தினசரிப் பத்திரி கையில் கல்யாண தம்பதிகளின் படமிருப்பதைக்கண்டு உடல் துடித்தாள். அது தனது கணவனும் புதிய மனைவியும்தான் என்பதையறிந்ததும் அதை வாங்கிப் பார்க்கவேண்டுமென்று ஆவல் துடித்ததால் வெட்கத்தைவிட்டு அதை வாங்கிப் பார்த்தாள். தனது சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது.

என்னவிருப்பினும் தன்னுடைய ஸ்தானத்தில் இன்னொருத்தி உட்கார்ந் திருப்பதைக் கண்டு மனது பொறுக்காது முதலில் மனித சுபாவத்தின் தன்மைப் படிக்கு சங்கடம் செய்து வதைத்தது...“உம். நாம்தான் கொடுத்துவைக்காத பாவியாகிவிட்டோம். இவளாவது சந்தோஷமாயிருந்து என் அன்பருக்கு சதா ஆனந்தத்தை அளிக்கட்டும். வீணாக நான் வருந்துவது மிகவும் பாவமாகும். மக

மாயித்தாயே! இந்த தம்பதிகளை ஆசீர்வாதம் செய்து காப்பாற்று. அவர்களிடம் நீ அணுகவே அணுகாதே. அதிலும் இந்தப் புதிய பெண்ணைக் கனவிலும் கருதாதே. தாயே!...என்னம்மணீ! உன் மனமிரங்கி இவர்களை விட்டுவிடு'' என்று மனதார பிரார்த்தனை செய்தாள்.

பத்திரிகையைத் திருப்பிக்கொடுத்துவிட்டுக் கண்ணீர்வழிய தனது விடுதிக்கு வந்தாள். மனப்புயலை அடக்கமுடியாது. வெகு நேரம் புழுகாய்த்துடித்தாள். இனி என்ன கதறித் தான் என்ன பயன்? ஆற்றுவாருமின்றி தேற்றுவாருமின்றிப் பரதேசியை அந்த மகமாயித்தாயேதான் வந்து தேறுதலளித்துக்காக்கவேண்டும்.

“கல்யாணந்தான் ஆகிவிட்டதே...இனி நான் என் கண்மணி ப்ரேமாவை ஏன் எடுத்துக்கொண்டு வந்து அவளோடு சேர்ந்து அம்மன் ஸேவையை செய்யக் கூடாது? குழந்தையின் இன்பத்தைக்கூடவா நான் இழக்கவேண்டும். இப்போது எனது நிறம் சற்று மாறியிருப்பதால் என்னிடம் குழந்தை பயப்படாமல் வருமல்லவா!'' என்று தனக்குள்தானே கேள்வி கேட்டுக்கொண்டாள்.

மறுபடியும் பட்டினியும் பசியும் தான் அனுபவிப்பது போதாமல் குழந்தைக்கும் ஏன் அந்த துர்ப்பாக்யம் வந்து சுற்றவேண்டும்! கொஞ்சநாளைய ஸேவையாவது முடிந்தபிறகு நேரே நாகராஜனின் உதவியால் குழந்தையைக் கொண்டு கஷ்டமின்றி வளர்க்கலாம். முதலில் கொஞ்சநாளைய ஸேவையாவது முடியட்டும்'' என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டாள்.

தினம் அம்மன் சன்னிதியை பிரதக்ஷணம் செய்து பின் சன்னிதானத்தின் முன்பு உட்கார்ந்து மனமுருகிப்பாடும் வழக்கப்படி அன்றும் பாடிக்கொண்டிருக்கையில் ஒரு பெரிய செல்வவந்தர் தம் குழந்தைக்கு மகமாயி விளையாடியதால், பிரார்த்தனை செலுத்துவதற்காக குடும்பத்துடன் வந்தார்.

க்ருபாவதியின் அற்புதமான, அதிசயிக்கத்தக்க மதுரகீதத்தைக் கேட்டு தடைகட்டிய நாகம்போல் அங்கு ஆணும்பெண்ணும் கூடி அந்த இன்பகானத்தில் அகமகிழ்ந்திருப்பதைக்கண்டு, “இத்தகைய தேவகானத்தை மழைபோல் பொழியும் யுவதி யாரோ!'' என்று ஆச்சரியத்துடன் கனவானின் குடும்பம் அங்கு வந்து நின்று நோக்கியது.

க்ருபாவதியைப் பார்க்கும்போதே மகமாயி விளையாடியது நன்கு தெரிந்ததால் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார். மனமுருகிக் கண்ணீர் பெருக கிருபாவதி பாரதியாரின் பாடலாகிய,

தேடியுனைச் சரணடைந்தேன், தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்ட வரந் தருவாய்.

பாடியுனைச் சரணடைந்தேன் பாச மெல்லாங் களைவாய்,
கோடி நலஞ் செய்திடுவாய், குறைகளெல்லாந் தீர்ப்பாய்.

துன்பமே யியற்கை யெனும் சொல்லை மறந்திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம்; யாவு மவள் தருவாள்.

நம்பினார் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

என்கிற பாட்டை வெகு உருக்கமாயும் தனது முழுத் திறமையையும் காட்டிப் பாடும்போது உலகையே மறந்தாள். மகமாயியின் உள்ளம் அப்படியே பூரித்துப் பரவசமுற்று தன்னை நோக்கிப் புன்முறுவல் புரிவதுபோன்ற ஒரு தோற்றமுண்டாகி அவளது இதயத்தில் ஆனந்த உணர்ச்சியும் பரிபூர்ணமான திருப்தியும் உண்டாயின. சற்று நேரம் பாடலை நிறுத்திவிட்டுக் கண்களை மூடியவாறே உட்கார்ந்திருந்து பின் கண்ணைத் திறந்தபோது தன்னெதிரில் தினத்தைவிட அதிக மனிதர்கள் கும்பல்கூடியிருப்பதைக்கண்டு சற்று அச்சத்துடன் எழுந்துபோனாள்.

இந்த மகா உத்தமியைக்கண்ட அக் கனவானுக்கு என்ன தோன்றியதோ, அவளையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். உடனே அங்கிருந்த பூசாரியைக் கூப்பிட்டு “இவள் யாரு?'' என்று விசாரித்தார். “யாரோ பரதேசியாம் பாவம்! மகமாயி விளையாடி ரூபமே மிகவும் மாறிவிட்டதாம். அதோடு திக்கே

யாரும் கிடையாதாம். கணவன் பட்டாளத்தில் சேர்ந்துகொண்டு சண்டைக்குப் போனவன் தகவலே தெரியாதாம். அம்மனுக்கு ஸேவை செய்வதற்காக வந்திருக்கிருள். சுமார் இருபதுநாளாகிறது. அன்னத்தையே கண்ணுல் பார்க்கவில்லை. ஏதோ பழமோ, தேங்காயோ, மோரோ கிடைத்ததைப் புசித்துக்கொண்டு வெகு உத்தமமான முறையில் ஸேவை செய்தும் பாடி பஜனை செய்தும் அம்மன் சன்னிதியில் தினம் மெழுகி முத்துமுத்தாக கோலமிடுவதும் புஷ்பங்களைப் பண்டாரத்தினிடம்வாங்கி விதவிதமாக மாலைகட்டி ஸமர்ப்பிப்பதுமாக சத்திரத்திலேயே என் தாயாரின் துணையில் காலத்தைத் தள்ளுகிருள். இத்தனை பட்டினியிலும் பசியிலும்கூட அந்தம்மாளின் சங்கீதம்மட்டும் த்வனி குறையவேயில்லை. இன்னும் மெருகுடன் பிரகாசிக்கின்றது. முந்தின தினம்கூட ஒரு சினிமாக்காரர் இந்த மதுரகீதத்தைக் கேட்டு மெய்மறந்துபோய் "இந்தம்மாளுக்கென்று தனியாகக் கதை எழுதி நடிக்கவேண்டிய ஏற்பாடு செய்கிறேன். ஆயிரமாயிரமாகப் பணத்தைக் கொடுக்கிறேன். பேசிவிடமுடியுமா'' என்று என்னைக் கேட்டார்.

"மகா யோக்யமாயும் உத்தமியாயும் பரம வேதாந்தியாயும் பக்த சிகாமணியாயும் இருக்கும் அந்தம்மாளின் கால் தூசிகூட உமது விருப்பத்திற்கு இசையாது; அவர்களிடம் கேட்டு அவமானப்படுவதைவிடக் கேட்காமலிருப்பதே மேல்'' என்று கண்டிப்பாய் கூறிவிட்டேன்'' என்ருர்.

வந்தவர் இடைமறுத்து, "ஏன் அப்படிச்சொன்னீர்? அந்தம்மாளின் அபிப்பிராயத்தைக் கேட்டுப் பின்னர் சொல்லக்கூடாதா! ஒரு வேளை சன்னியாசினி, கன்யாமாடத்தலைவி, முதலிய (ஆண்களுடன் சம்மந்தமில்லாத) வேடங்களில் நடிக்க விரும்புவாரோ என்னவோ! அவர்களைக் கேட்காமலேயே சொல்லியிருப்பது கூடாது'' என்று ஒரு வெடிவிட்டார்.

அதற்கந்த பூசாரி சிரித்தவாறு, "உம். அந்தம்மாளின் குணத்தையும் அபிப்பிராயத்தையும் அவர்களுடன் பேசும்போதே அறிந்துகொண்டேன் சார்! சினிமாவைப்பற்றியும் நடிகர்களைப்பற்றியும், ஏதோ ஒன்று இரண்டு பேர்களைத்தவிர, மற்றவர்களை மிகவும் கேவலமாகப் பேசி ஏசுகிருர்கள். கலைக்குப் பாடுபடும் படத்தொழிலில் ஆண்களும் பெண்களும் கற்பின் கொலைக்குத்தான் பாடுபடுகிருர்கள் என்றும் திட்டமாகக் கூறுகிறவர்களிடமா சினிமாவில் நடிக்கக் கேட்பது? சரிதான். எனக்குத்தான் சரியான பூசை கிடைக்கும்... அதோ ஸேவார்த்திகள்காத்திருக்கிருர்கள். நான் போகிறேன்'' என்று கூறிச்சென்ருர்.

தனவந்தரும் தாம் வந்த பிரார்த்தனை காரியத்தை முடித்துக்கொண்டு தமது மனைவியைமட்டும் அழைத்துக்கொண்டு நேரே சத்திரத்திற்குவந்தார். கிருபாவதி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டு தன்போக்காக ராகமிழுத்துக் கொண்டிருந்தாள்.

தனிகரின் மனைவி, "அம்மா! இதோ அம்மனின் பிரஸாதம் கொஞ்சம் வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று மிகவும் கனிந்த குரலில் கூப்பிட்டாள். தன் விடுதியைத் தேடி வந்து தனக்கு அன்புடன் பிரஸாதமளிக்கும் உத்தமர்கள் யாரோவென்று அதிசயத்துடன் எழுந்து பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு மௌனமாக நின்ருள்.

அந்தம்மாள் கிருபாவதியை நோக்கி, 'நீ இந்த கோயிலில் ஸேவை செய்வதற்காக வந்திருக்கிருயா! மகமாயியின் விளையாட்டால் அங்க ஊனம் ஒன்றும் இல்லையே... என்று தாகை வார்த்தையை ஆரம்பித்தவாறு அங்குள்ள திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

கிரு:—ஒன்றுமில்லையம்மா! ஸேவை செய்யவேண்டுமென்று ஆசை தூண்டியது. அதனுல் செய்கிறேன். பகவானுக்கு உழைப்பதற்குப் பாக்யம் வேண்டாமா!

தனிகர்:—ஆகா! அவசியம் வேண்டும். அதிலும் உங்களுடைய விலையிலாத மதுரகீதத்தினுல் அம்மன் உள்ளத்தை மகிழச்செய்வதானது வெகு மேன்மையல்லவா! உங்கள் கான மழையில் நாங்கள் மூழ்கி மெய்மறந்தோம். நான்

ஏதோ சினிமாக்காரன் என்று பயந்துவிடவேண்டாம். கோட்டையூர் ரேடியோ நிலயத்தின் உத்யோகஸ்தன். என் குழந்தைக்கு மகமாயி விளையாடியபோது நேரில் இங்கு வருவதாக வேண்டிக் கொண்டோம். அதற்காக வந்தோம். உங்களுடைய மதுரகீதத்தைக் கேட்டது முதல் இந்த அற்புதகானத்தை எல்லா சங்கீத அபிமானிகளும் கேட்டு இன்புற்று பயன்பெறவேண்டுமென்பது என் ஆவல். ஆகையால் ரேடியோ நிலயத்தில் தாங்கள் மாதச் சம்பளத்திற்கு நிரந்தர சங்கீத வித்வாம்ஸினியாக அமர்ந்து அடிக்கடி சமயம்வரும்போதெல்லாம் பாடவேண்டும் என்பது என் விருப்பம். சரியான சம்பளமும் தகுந்த இடவசதியும் கொடுப்போம். நாடகங்கள், பெண்கள் நிகழ்ச்சிகள், குழந்தைகளின் நிகழ்ச்சிகள், யாராவது பாட வருகிறவர்கள் வராது தவறிவிட்டால் அந்தப் பாடகர்களுக்குப் பதில் பாடுவது, சாமர்த்தியமாக நீங்களே சில நிகழ்ச்சிகளைத் தயார் செய்தாலும் அதை ஒலி பரப்பலாம். உங்களுக்கு மிகவும் பொருத்தமான வேலையாதலால் நீங்கள் நன்றாக யோசித்து நாளைதினம் இதே சமயத்திற்கு வருகிறேன். பதில் சொல்லுங்கள். இப்போது மாதம் 100 ரூபாய் சம்பளம் போடுகிறோம்; பிறகுதானாக உயர்த்தவும் செய்வோம்.

ஸ்த்ரீகள் தங்களுக்குள்ள வித்யா சாமர்த்தியத்தினாலும் கல்வி, சங்கீதம் முதலிய இன்னுமுள்ள கலா சாமர்த்தியத்தினாலும் தன் கை மேலாக சம்பாதிப்பதில் எவ்வளவு பெருமை இருக்கிறது தெரியுமா! நீங்கள் இஷ்டமானபடி தான தருமம் செய்யலாம். சுகமாக எப்போதும் பகவானை பஜிக்கலாம். எத்தனையோ சௌகரியங்கள் உண்டு. யோசித்துச் சொல்லுங்கள்'' என்று கூறி விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

க்ருபாவதிக்கு இச் செய்தியைக் கேட்டதும் இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு குழப்பமும் உணர்ச்சியும் இதயத்தில் போராடுகிறது. ஆசைக்கனலும் தலைதூக்கி எழவாரம்பித்தது. மகமாயித்தாயிதான் இந்த சிறந்த வழியை நமக்குக் கொடுத்திருக்கிறாள்போலும், அனாதரவுப்பிணமாகக்கிடந்து ஏன் சாகவேண்டும். இந்த வேலையை ஒப்புக்கொண்டு கௌரவமாக ஏன் ஜீவிக்கக்கூடாது... இதிலிருந்தபடியே நம் கண்மணி ப்ரேமாவையும் நல்ல உயர்ந்த முறையில் பழக்கி அவளையும் ஒரு உதாரணப் பெண்மணியாக ஏன் செய்யக்கூடாது. சினேகிதர்களின் வீட்டிற்குப்போனால்கூட நமது வயிற்றுக்கஞ்சிக்கு நம் கை மேலாக இல்லாவிட்டால் அதுவும் இளைப்பமில்லையா! நாகராஜனும் சாதாரண சம்பளமுடையவர்தானே... வலியவந்துள்ள இந்த அதிர்ஷ்டத்தை ஏன் விடவேண்டும்?' என்கிற எண்ணங்கள் மனத்தில் போராடுகின்றன. நித்திரையும் கொள்ளாது எண்ணாததெல்லாம் எண்ணித் தவிக்கிறாள். ஒப்புக்கொள்ளு. சங்கீதக் கலைக்குத் தொண்டுசெய்து நீயும் கண்ணியமாக ஜீவனம் நடத்து என்கிறது ஒருபுறம்.

மற்றொருபுறமோ, கணவனால் விலக்கப்பட்ட உனக்கு உத்யோகமும் பதவியும் வேறு வேண்டுமா! அம்மன் சன்னிதியிலேயே பாடிக் காலத்தைக் கடத்தேன்... என்கிறது. இரண்டு போராட்டத்திலும் தெளிவு பெறாது தத்தளிக்கின்றாள். மூளையே குழம்பிவிடுமோ என்று கவலையும் உண்டாகியது.

உடனே இரண்டு அபிப்ராயங்களையும் எழுதி அம்மனின் சன்னிதானத்திலேயே திருவுள்ளச் சீட்டுப்போட்டு மகமாயியை வேண்டியபடியே கண்ணைமூடிக் கொண்டு ஒன்றை எடுத்தாள், **"தியங்காதே ஒப்புக்கொள்ளு."** என்று வந்த சீட்டைக்கண்டு உள்ளம் பூரித்தாள். எத்தனைக் கவலைகள் துக்கம், ஏக்கம், எது இருந்தபோதிலும் இந்த உத்யோகம் அவள் மனத்தைக் கவர்ந்தது. அம்மனைச் சரணம் புகுந்ததற்கு இந்த அரிய வழியைக் காட்டியதாகவே எண்ணிப் பூரித்தாள். இந்த புதிய எதிர்பார்ப்பில் முகத்தில் புதிய களைகூடத் தாண்டவமாடியது.

40

மனமுடைந்து சென்ற நாகராஜனுக்கு இருக்கையே கொள்ளவில்லை. முரளியை சபிப்பதும் கொஞ்சநஞ்சமல்ல, தன்னைப் பார்க்கக்கூட ப்ரியப்படாத மனிதரிடம் தான் இனி திடும் என்று போகக்கூடாது. க்ருபாவதியை எப்படி

யாவது தேடிப்பிடித்து அவளுடைய பரிதாபகரமான பிம்பத்தையும்கூட அழைத்துக்கொண்டுதான் போகவேண்டுமென்று தீர்மானித்துவிட்டானதலால் அன்று முதல் எந்தெந்த ஊரில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று உளவு விசாரிக்க வாரம்பித்தான்.

மேல் அத்யாயத்தில் தீர்மானித்தபடி கிருபாவதி தன்பெயரை லக்ஷ்மீ பாய் என்று மாற்றிக்கொண்டு முழுதும் புதியவளாக மாறிப்போய் மாதம் 100 ரூபாய் சம்பளத்தில் வேலையிலமர்ந்து சற்று நிம்மதியாகவிருக்கும் ரகஸிய மறியாது நாகராஜன் எங்கு தேடினல்தான் கிடைக்கப்போகிறுள்! அவன் ஏறி இறங்காத பயித்தியக்கார ஆஸ்பத்திரியில்லை. எத்தனையோ சிபார்சுகளின் பேரில் அவன் உள்ளே சென்று அங்குள்ள கண்ராவிகளைப் பார்க்கப் பார்க்க க்ருபாவதி இப்படியா இருப்பாள் என்ற எண்ணம் அவனை உள்ளூர வதைத்தது.

இந்த அலைச்சல் உடம்புக்கு ஆகாமல் அதிக ஜுரம் வந்துவிட்டதால் நேரே கண்ணம்மாளுக்கு ஊருக்கு வரும்படிக் கடிதமெழுதிவிட்டுத்தான் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். சாதாரணமாகக் காணுதுபோய்விட்டாலே மனிதர்களைத் தேடுவதும் கண்டுபிடிப்பதும் கஷ்டம். அதிலும் பயித்தியம் பிடித்தவளை எங்கு தேட முடியும் என்று மனது சலிப்புற்றது. எங்காவது தற்கொலைபுரிந்து கொண்டிருப்பாளோ! என்றே அவனுக்குத் தோன்றியது.

அலைந்த அலைச்சலுக்குப் பலனும் இல்லாது இத்தகைய ஜுரமும் வந்துவிட்டதால் கண்ணம்மாளுக்கு மிகவும் பயமாகியது. தன் கணவனுக்கு எவ்வித ஆபத்துமின்றி இருக்கவேண்டுமே என்று சதா ப்ரார்த்தனை செய்து வேண்டுகிறுள். கோயிலை ப்ரதக்ஷிணம் செய்கிறுள். நல்ல டாக்டரிடம் காட்டி அக்கரையாகக் கவனித்தும் வருகிறுள். அத்தனை ஜுரத்திலும் நாகராஜன் "கண்ணம்மா! நான் நினைத்தது ஒன்றுமே நடக்கவில்லையே! என்ன செய்வது? அந்த மூர்க்கன்மீது எனக்கிருக்கும் எரிச்சல் தணிய ஒரு கடிதம் எழுதி ஆபீஸுக்கே அனுப்பிவிடட்டுமா! அதிகாரிகள் வரையில் அவனுடைய கேவலமான நிலைமை தெரிந்து சிரிக்கட்டும். நம்மைப்பற்றிக்கூட அடியோடுமறந்துவிட்டான். இந்த அதமனுக்குத்தான் இதயம் வரண்டுவிட்டது. நாமும் அப்படி இருக்கலாமா!" என்று அன்பொழுகக் கேட்டான்.

கண்ணம்:—உங்கள் மனத்தின் பரிசுத்தம் அவனுக்கில்லாது போய்விட்டதே. மகா உத்தமியாயும் பர்த்தாவின் நிழல்போலுமிருந்த மனைவியையே நிராகரித்த கல்நெஞ்சன் உங்களை எப்படி மதிக்கப்போகிறுன். நீங்கள்தான் கிட்டத்தட்ட ஒன்றரைமாத காலமாக வேளைச்சாப்பாடு வேளைக்கின்றி கண்டபடி திரிந்து பட்டினியும் பசியுமாக சரியான ஆகாரமில்லாமலும், நித்திரையில்லாமலும் திரிந்ததன் பலன் உடம்பு கெட்டுவிட்டதுதான். இனி எங்குதான் தேடமுடியும்?

நாக:—ஒரு இடமா தேடினேன். பிச்சைக்காரர்களின் கூட்டங்களில் கூடத் தேடியலைந்தேன். பயித்தியக்கார ஆஸ்பத்திரிகள் பாக்கியில்லை. என்னல் முடியாமல் போனதால்தான் வந்துவிட்டேன். அதிருக்கட்டும், நீ ஒரு காகிதம் பேன கொண்டுவா! நான் சொல்கிறபடியே எழுது, பிறகு நான் கையொப்பம் வைக்கிறேன். உம்...என்ன யோசிக்கிறுய் கண்ணம்மா! கொண்டுவா—என்று சற்று ஆவேசத்துடன் கூறினன்.

கண்:—ஒன்றுமில்லை. நேரில் வீட்டைத் தேடிக்கொண்டு போனபோதே மதியாத மனிதன் கடிதத்திற்கு மதிப்பு கொடுக்கப்போகிறுன என்றுதான் யோசிக்கிறேன்.

நாக:—உம். பயித்தியக்கார எண்ணம். எப்போதும் உலகம் எப்படிச் செல்லுகிறது என்பதை நீ உணரவில்லை. நேரில் பார்க்கும்போது உண்டாகும் உணர்ச்சிகளும், ஆத்திரமோ அவமானமோ உச்சத்தை எட்டிவிட்டால் அதனல் விளையும் கேடுகள் பலபல உண்டு. அந்த சமயம் அவன் என்னை நேரில் பார்க்காததற்கு அவமானமே காரணமாக இருக்கும். புதிய இன்ப உலகத்தில் தன்னை சொர்க்க போகத்திலாழ்த்தும் மனைவி, அவளுடைய அண்ணன் இன்னும் யார்

யார் இருந்தார்களோ! யார் கண்டது? இம்மாதிரியான சமயத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடப்போகிறதே என்கிற பயத்தினால் அவன் அவ்வாறு செய்திருக்கலாம். கடிதத்திற்கு அக்கதி ஏற்படாது. அதற்குப் பதில் எழுதாதிருந்தால் பரவாயில்லே. விஷயத்தை உலக மறிந்துகொண்டது என்பதையாவது அவன் அறியலாமல்லவா! ஆகையால் எழுது கண்ணம்மா!—என்று உத்திரவிட, அவன் சொல்கிறபடியே கண்ணம்மா எழுதி முடித்தாள். நாகராஜன் கையொப்பமிட்டு அதைத் தபாலுக்கு அனுப்பினன். அதன் பிறகே அவன் மண்டையில் பெரும்பாரமாகத் துளைத்துக்கொண்டிருந்த வேதனை சற்று குறைந்ததுபோல் காணப்பட்டது.

அன்று அளப்பரிய ஆத்திரத்துடன் தாயாரிடமிருந்து சென்ற முரளிக்கு நாகராஜன்மீது கூறத்திறமற்ற ஆத்திரம் உண்டாகியதால் நேரில் அவன் வீட்டிற்குச் சென்று கையும் மெய்யுமாக இருவரையும் சேர்த்துப்பிடித்து பஜீத் செய்யவேண்டும் என்கிற ஆவேசமும் தீராத பதட்டமும் உண்டாகியதால் நேரே நாகராஜனின் ஊருக்குச் சென்று விசாரித்தான்.

நாகராஜன் என்ன காரணமாகவோ மனைவியைத் தாயார் வீட்டிற்கு அனுப்பிவிட்டு இரண்டுமாதத்திற்கு லீவு வாங்கிக்கொண்டு எங்குபோனன் என்பதே தெரியாது போயிருக்கிருன் என்கிற தகவலைக் கேட்டதும் காக்காய் ஏறியது பனம்பழம் விழுந்தது என்றதுபோல் மகா பாவியாகிய தன் தாயாரின் அக்ரமவார்த்தைக்கும் இந்த இடத்துச் செய்திக்குமொன்ருகிவிட்டதால் அப்படியே தலை வெடித்துவிடும்போலான வேதனை உண்டாகியது. "நான் எத்தனையோ உயர்வாக எண்ணி மதித்துவந்த நேசன் இத்தகைய த்ரோகியாகவா மாறிவிட்டான். நான் எப்போது கிருபாவதியைக் கைவிடுவேன் என்று பார்த்துக்கொண்டிருந்து இருவரும் குதிரையைத் தட்டிவிட்டார்களே பாவிகள்!... இப்போது எனக்குள்ள ஆத்திரத்தில் அந்த இருவரையும் ஹதம் செய்துவிடலாமா!" என்று நினைத்தான். அடுத்தக்ஷணமே தனது மேலான உத்யோகத்தின் கண்ணியமும் இந்த வெட்கக்கேடான விஷயத்தை வெளியாரறிந்தால் அதனல் உண்டாகும் அவமானமும் கவுரவக் குறைவும் அவனை மிகவும் பாதித்தன. அதோடு "நமக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டப் பீடை இனி நமக்கு எதற்கு? அதில் நாம் ப்ரவேசித்தால் காலைத்தான் சுற்றும். மேலும் இம்மாதிரி துலைந்துவிட்டதால் இனி நம்மிடம் வருவதற்கும் முகமில்லை குழந்தையைக் கேட்பதற்கும் பவிஷில்லை. குழந்தையை இனி, இஜ்ஜென்மத்தில் அவள் கண்ணில் காணதபடிச் செய்தால் அவளுக்கு அதுவே தகுந்த ப்ராயச்சித்தமாகிவிடும். எந்த தாயும் தான் எத்தனை கெட்டுப் போனவளாயிருப்பினும் தன் குழந்தைகளை துறக்கவோ, வெறுக்கவோ மனது துணியாது. அந்த ஏக்கமே போதுமான தண்டனையாகிவிட்டது" என்று தன் மனமே ராஜாவாயும் ஆத்திரத்தில் கண்மூடித்தனமான ஆவேசமே தீர்ப்பாயும் செய்துகொண்டு மறுபடியும் தன் தாயாரிடம் வந்தான்.

பார்வதியம்மாள் திடுக்கிடும்படி தன் குழந்தையை எடுத்துக்கொண்டு அதன் தாதியையும் அழைத்துக்கொண்டு, "அம்மா! குழந்தையில்லாது என்னல் இருக்க முடியாது. இனி நானே வைத்துக்கொள்கிறேன்" என்று கூறியவாறு போய்விட்டான். பார்வதியம்மாளுக்கு இடி இடித்ததுபோலாகியது. பின்னலேயே ஓடிவந்து, "அடேயப்பா! குழந்தையை உங்களுக்கு வளர்க்கத்தெரியாதுடா! வீணைப் பாழ்படுத்திவிடப்போகிறீர்களே...குழந்தைக்காகவாவது நானும் கூட வந்து உங்களோடு இருக்கிறேண்டா! தங்க விக்ரகம் போன்ற குழந்தையை வளர்க்கத்தெரியாது கொன்றுவிடப்போகிறீர்களே! குழந்தையைக் கொடுடா! பணக்காரன் வீட்டுப் பெண்ணகிய உன் மனைவிக்குக் குழந்தை வளர்க்கத்தெரியாதுடா! முரளீ! முரளீ! இப்படிக் கொடு" என்று கெஞ்சினள்.

முரளி அதை சட்டை செய்யவேயில்லை. "பெத்தவர்களுக்குக் குழந்தை அருமை தெரியும்" என்று கூறியபடியே காரைவிட்டுக்கொண்டு போய்விட்டான். பார்வதியம்மாளின் மண்டைமேல் பட்டாரென்று அடித்ததுபோலாகிவிட்டது.

கணவனும் எங்கு சென்ளுரோ தெரியவில்லை. தான் பெற்ற ஒரே ஒரு மகளையும் தனக்குச் சுகமோ சந்தோஷமோ அற்றுப்போய்விட்டது. இந்த ஒரு குழந்தையின் முகத்தினல் தெம்பும் ஆனந்தமும் கொண்டிருந்ததும் மடிந்துவிட்டபிறகு செத்த பிணத்திற்குச் சமமாகவே அவள் நிலைமை முடிந்தது. இத்தனைக்கும் தனது துராக்ருதமான குணத்தின் தீப்போன்ற செய்கையே காரணமல்லவா...என் பதைமட்டும் நெஞ்சில் நினைக்கவே இல்லை.

தனக்கு சரிக்குச் சமமான சம்மந்தம் செய்யாது ஒரு சமையல்காரியின் மகளை அந்தப் பாவி செய்து வைத்ததுதான் தன் தலைவிதி இப்படி சிதறிவிட்டது என்ற எண்ணமே ஊர்ஜிதமாகத் தோன்றியது. அந்த தோற்றத்தின் வேகமே அவள் ரத்தத்தில் ஊறிக் கொதிப்பும் எடுத்துக்கொண்டது. என்னே உலக விசித்திரம்! திருடியவரும் கொலை செய்தவரும் தாம் செய்த மகத்தான பாதகத்திற்குத்தாம் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருப்பதாக எண்ணுமல் தாம் குற்றம் செய்ததைப் பிறர் பார்த்து வெளியிட்டுவிட்டார்கள்; அதனல்தான் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்ததென்கிற புதிய க்ரோதமும் ஆத்திரமுண்டாகி அவர்களைக் கொன்றுவிடவோ கைகால்களை முறித்துவிடவோ வேறு வழியில் தீங்கு செய்யவோ முற்பட்டுவிடுவதுபோலத்தான் பார்வதியம்மாளின் கதியும் ஆகியது.

41

ஓட்டலில் நாகராஜன் போய் பார்த்தபோது வேண்டுமென்றே முரளிக்கு உடம்பு என்றும், பார்க்கவிடக்கூடாதென்றும் பேபியே அமுக்கிவிட்ட ரகஸியம் முரளிக்குத் தெரியாது. "நாகரீகக் கடலில் முழுகிக் கிடக்கும் சமயம் பழய அநாகரீக நண்பன் பார்த்தால் அது மிகவும் அகௌரவம் என்றும் அதனல் கணவனின் மனது மாறினலும் மாறிவிடும்" என்கிற பயமும் சேர்ந்ததால் அம்மாதிரி செய்தாள்.

அதன்பிறகே விருந்து நடந்ததும் ரேடியோ கேட்டதுமான சம்பவங்கள் நடந்தன. ரேடியோ கேட்டு முரளி மாறியதும் உடனே தன்னிடம் சொல்லாமல் ஊருக்குச் சென்று, திரும்பி வரும்போது குழந்தையோடு வந்ததும் பேபிக்கு இன்னதென்று புரியாத மர்மமாக இருந்ததால் திகைத்துப்போய் கணவனை உற்றுப் பார்த்தாள்.

ப்ரேமாவைத் தாங்கி வந்த முரளி. "இந்தா பேபீ! இந்தா! உனக்கு அருமையான குழந்தை இந்தா! விஷயம் என்னவென்று என்னைக் கேட்காதே. நான் அதிக மாதம் லீவுக்கு முதலில் ஏற்பாடு செய்திருந்தேன். எனக்கிப்போதுள்ள நிலைமையில் இம்மட்டும் போதும் என்று தோன்றிவிட்டதால் லீவை ரத்து செய்யும் படி அதிகாரிக்கு எழுதியதோடு, வெகு தூரத்திலுள்ள பஞ்சாப்பில் உள்ள ஆபீஸுக்கு என்னை மாற்றிவிடட்டுமா என்று முன்பு கேட்டிருந்தார்கள், அதன் படி மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்துவிட்டேன். நாம் அடுத்தவாரமே கிளம்பும் படி இருக்கும். குழந்தையைப் பிரிந்திருக்க மனமின்றி கொண்டுவந்தேன் நீ அதற்கு மாற்ருந்தாயில்லை. பெற்றதாயே என்றுதான் நான் நம்பி எடுத்துவந்தேன். இந்தா பேபி...என்று கையில் வலுக்கட்டாயமாகக் கொடுக்கப்போனன்.

இந்த விஷயங்கள் பேபியின் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தன. "என்ன லீவு ரத்து செய்யப்பட்டதா!...பஞ்சாப்புக்கு மாற்றலா...இதென்ன பித்தலாட்டம். கண்ணே கண்ணு. ஒரே பெண்ணே பெண்ணு" என்று என் பெற்றோர்கள் என்னை நேசித்து அவர்கள் சமீபத்திலேயே அடிக்கடி பார்க்கும்படியான இடத்தில்தான் நான் இருக்கவேண்டுமென்கிற ஆசையால்தானே பெண்ணுக்கு மேல் பெண்ணுகை. கழுவியவன் காலையே கழுவி. இரண்டாந்தாரமானலும் பாதகமில்லை என்று என்னைக் கொடுத்தார்கள்.

என் பிதாவின் பதவி, கண்ணியத்திற்கு, ஸிம்லாவிலும் ராவல்பிண்டியிலும் ரங்கூனிலும் டில்லியிலும் எத்தனை பிள்ளைகள் கிடைத்தார்கள். அவ்வளவு தூரம் கொடுக்கமாட்டோம் என்றுதானே அந்த இடங்களைத் தட்டிவிட்டார்கள். அவர்களில் ஒருவன் எப்படியும் என்னையே மணக்கவேண்டுமென்று பிரம்மப் பிரயத்

 தனம் செய்தான். 'என் பெற்றோரின் இஷ்டத்திற்கு மாறாக நான் சம்மதிக்கமாட்டேன்' என்று கூறிவிட்டேன். இளையாள் கல்யாணமானாலும் நல்ல கௌரவமான உத்யோகம், இளம் வயது, அழகு, செல்வம் முதலியவைகள் நிரம்பியிருப்பதோடு அருகிலேயே இருக்கிற ஒரு நன்மையை உத்தேசித்துக் கொடுத்ததற்கு பிரதி யுபகாரமோ இது. இக் காரியம் நடக்கவேமுடியாது. திடீரென்று லீவுகளை ரத்து செய்யவும் நான் சம்மதிக்க மாட்டேன், என்னுடைய சினேகிதைகள் ஒவ்வொரு ஊரில் ஒவ்வொருவர் நமக்கு விருந்து நடத்தி மகிழக் காத்திருப்பதையும் அழைப்புகள் அனுப்பியிருப்பதையும் மறந்துவிட்டீர்களா!

இளந் தம்பதிகள் ஆனந்தமாக அவர்கள் வீட்டிற்கு விருந்துக்குப் போகும் போது இதென்ன ஒரு கத்திரிக்காய் கொஸறு. இதைப் பார்த்தால் அவர்கள் பரிகஸிக்கமாட்டார்களா? என்ன காரணத்தினால் நீங்கள் திடீரென்று இவ்வாறு மாறுதலையடைந்துவிட்டீர்கள்! நடந்த சமாச்சாரம் என்ன! இப்பொழுது எங்கு போய் வருகிறீர்கள்!'' என்று அடுக்கிக்கொண்டு போகிறாளேயன்றி கையில் குழந்தையை வாங்கவில்லை.

குழந்தையை வைத்திருக்க வந்த தாதிப் பெண் இவ்வறைக்கு வெளியிலேயே நின்று இந்த சம்பாஷணைகளைக் கேட்டு திடுக்கிட்டு நின்றாள். 'பார்வதியம்மாளின் பிடுங்கலைவிட்டுக் கிளம்பிவிட்டோம், வேறு இடத்தில் இன்னும் சந்தோஷமாக வாழலாம்' என்கிற பெரிய எதிர்பார்ப்புடன் வந்தவளுக்கு இந்த சம்பவம் ஒன்றுமே தோன்றாத ப்ரமை பிடித்ததுபோலாயிற்று.

குழந்தையோ, தகப்பனார் முகத்தைப் பார்க்கிறது. அழுகிறது. பேபி கையில் குழந்தையை வாங்காததால் அது நாற்புறமும் தன்னை வைத்துக்கொள்ளும் தாதியைத் தேடவாரம்பித்தது.

முரளியின் மனது குழம்பிப்போய் தவிக்கின்றது. பேபியின் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் பொத்துவதோடு குழந்தையை வாங்காது அழவிடுவதைக் கண்டு பின்னும் சற்று எரிச்சலே உண்டாகியது, "பேபி! குழந்தையைப் பிடிக்கப்போகிறாயா! இல்லையா?'' என்று சற்று அதட்டிய குரலில் கேட்டான்.

பேபி:—ஏன்! நான் என்னவிருந்தாலும் இளைய தாயார்தானே! குழந்தையை அப்படி சொன்னாள், இப்படி சொன்னாள்; படுத்தினாள் என்கிற புதுப் பட்டத்தை எனக் களிப்பதற்காகத்தான் நீங்கள் மட்டும் ராவ்சாகிப் பட்டம் பெற்றால் போதாது; என்று எனக்கும் ஒரு பட்டத்தை அன்புடன் வாங்கித் தருவதற்கு இத்தகைய காரியத்தைச் செய்தீர்களா! அதோடு கல்யாண காலத்தில் குழந்தையின் வளர்ப்பைப் பற்றி சகலமும் உங்கள் தாயாரே கவனித்துக் கொள்வதாகவும், குழந்தை இருப்பதாகவே நினைக்கவேண்டாம்.நானிருக்கிறேன். என்று உங்கள் தாயார் சொல்லி இருக்கையில் இதென்ன புதிய வேடிக்கை?...

முரளியின் கோபம் உச்சத்தை எட்டியது. குழந்தையின் அழுகையும் கண்ராவியும் ஒருபுறமும் வதைக்கிறது. கடுமையான த்வனியில், "பேபி! குழந்தையை வாங்கிக்கொள்ளப்போகிறாயா! வீண்கதை யளக்கப்போகிறாயா?'' என்று ஒரு அதட்டு போட்டான்.

இந்த நாடகத்திற்கிடையில் குழந்தை எங்கே அழுது செத்துவிடுமோ என்கிற அங்கலாய்ப்பால், "சாமி! குழந்தையின் நெஞ்சு உலர்ந்துவிடப் போகிறதே கொஞ்சம் பாலாவது போட்டுகிறேன். இப்படிக் கொடுங்கள்'' என்று கேட்டவாறே தன் கையில் தயாராகவைத்திருந்த பீடிங் பாட்டலைக் காட்டியவாறு வாசற்படியருகில் வந்து நின்றாள் தாதி.

இதுவரையில் பேபி இந்த தாதியைப் பார்க்கவில்லையாதலால் இவளைப் பார்த்ததும் இன்னும் புதிய வேகமும் கோபமும்முகத்தில் ஜ்வலிக்க வாரம்பித்தது. "ஓகோ! இந்த கத்திரிக்காய் கொசுறு வேறு வந்திருக்கிறதா! பேஷ்! இனி என்ன குறைவு இருக்கிறது? சம்பூரணமாகப் பொங்கிவிட்டது. சன்யாசி பூனைக்குட்டி வளர்த்த கதையை மறக்கவேண்டாம். குழந்தைக்காக தாதி; தாதிக்காக ஒரு

வேலைக்காரி. வேலைக்காரிக்கும் தாதிக்கும் சேர்ந்த விடுதி, அவர்கள் சுகமாக ஜீவித்திருக்கவேண்டி மற்ற வசதிகள்; பிறகு அவர்களுக்குக் கணவன்மார்கள்...

என்று முற்றுப்புள்ளி வைக்காமல் அடுக்கிக்கொண்டு போவதை எந்த முட்டாள் மனிதனாகவிருந்தாலும் தாங்கமுடியுமா! முரளியின் கட்டு தளர்ந்து விட்டது. தாதி சமயம்பார்த்து குழந்தையைத்தானே முரளி கையிலிருந்து வாங்கிக்கொண்டு நகர்ந்தாள். முரளி அவனை மீறிய கோபத்துடன் "அதிகப்ரஸங்கி! என்னை என்ன வெறும் சும்பன் முட்டாள் கழுதை, உணர்ச்சியற்ற பேமானி என்று நினைத்து இப்படி உளறுகிறாயா! சீ! நாயே! வாயை அடைத்து நில்லு. உன் பணக்காரத்திமிரும் இந்த வீண் கர்வத்தாண்டவமும் இந்த முரளியிடம் வேண்டாம்'' என்று கூறியபடியே பளார், பளார் என்று முதுகிலும் கன்னத்திலும் நன்றாக அறைந்துவிட்டான்.

தான்கூட இத்தனை துணிகரமாக அடித்துவிட்டோமா! என்கிற ஆச்சரியம் அவனுக்கே தாங்கமாட்டாது பொங்கியது. பேபியின் நிலைமையைக் கூறவேண்டுமா! பெரியதாக கூச்சலிட்டுப் புலம்பியபடியே, "ஆகா! உங்களை உணர்ச்சியற்றக் கட்டை என்று யார் சொல்வார்கள்? உணர்ச்சி காட்டாற்று வெள்ளம்போல் பொங்கிவரும் வீரராக விருப்பதனுல்தான் அக்கினி சாக்ஷியாகக் கட்டிய மனைவியை, தெய்வத்திற்கும் அஞ்சாது, உலகமெல்லாம் பயந்து நடுங்கும் மகமாயிக்குக்கூட பயப்படாது, வெளியழகு குறைந்ததைக் கண்டு அவளை வெறுத்து விலக்கி பயித்தியமாகச் செய்துத் தள்ளிவிட்டு உணர்ச்சியுடன் மறுமணமும் செய்துகொண்டீர்கள். அப்போதே என் தந்தை சொன்னுர். "எழுவெடுத்த கல்யாணமே வேண்டாம் அதிலும் நெருப்பின் முன்பு புகையில் கண்ணவியச்செய்யும் சடங்குடன் செய்யவே வேண்டாம். ரிஜிஸ்டர் செய்துவிடலாம் என்று முட்டிக்கொண்டார். உங்கள் தாயார்தான் ஏதோ குடி முழுகிப்போவதுபோல் இம்மாதிரிச் செய்து நம்மை இப்படி சிரிக்க வைத்தாள். ரிஜிஸ்டர் கல்யாணமாக இருந்தால் ஒரு நிமிஷம் ரத்துசெய்துவிட்டு ஆனந்தமாக இருக்கலாமே! நெருப்பை மூட்டித் தாலியைக் கட்டிவிட்டதலைல் தானே உங்களுக்கு இனி இதை மாற்றமுடியாத பந்தமும் உரிமையும் வந்துவிட்டதென்கிற இறுமாப்பு பிடித்துவிட்டது. வெளியழகு குறைந்ததற்காக ஒரு பெண்ணை சந்தியில்விட்ட உங்கள் உள்ளழகு, மூளை குறைந்துவிட்டதென்று ஏன் நான் உங்களைக் கைவிடக்கூடாது? சட்டம்... சட்டத்தின் தலையில் இடிவிழ, சாஸ்திரத்தின் தலையில் நெருப்புமழை பெய்ய. இத்தகைய ஒவ்வாத காரியங்களைச் சாத்திரமாக்கிவிட்டதால் அதன்படி நடக்கவேண்டுமென்று என்ன விதி?...

கையைத்தீண்டி அடிக்கவும் உங்களுக்கு தைரியம் வந்துவிட்டதா? ஆகட்டும். ராவ்பகதூர் பட்டத்தின் பெருமையை, தடபுடல் அட்டகாஸத்தின் திமிரை எங்கப்பாவின் மூலம் ஒரு கை பார்த்துக்கொள்கிறேன். அத்தனை சாமர்த்தியம் எனக்கு உண்டு என்பதை நன்ருக நினைவில் வைத்துக்கொள்ளலாம். இந்த ரஸாபாஸ வாழ்வுக்காக என்னை என் பிதா உங்களிடம் தரவில்லை... என்று விடுவிடுப்பாகப் பேசிவிட்டு சடக்கென்று அந்த அறையைவிட்டு வெளியே போனுள்.

அவள் எங்கே வெளியேபோனுள், என்னவானுள், என்பதை முரளி கவனிக்கப் பிரியப்படவே இல்லை. அவனுடைய நிலைமையில் கவனிக்கத் தோன்றவுமில்லை. "தலைவிதி, தலைவிதி, கர்மம், முன் செய்த கொடுமை பின்னர் சம்பவிக்கும்" என்றெல்லாம் பெரியார் சொல்லும்போது வெறும் விளையாட்டுப் பதங்கள் என்று அடுக்கிக்கொண்டே போனுர்கள் என்று எண்ணினேனே! அந்த விதி என்கிற கொடிய சாபத்தின் சாயல் இதுதானு! பணக்காரி, அழகி, படித்தவள்" என்றெல்லாம் மயங்கி அறிவிழந்து ஆத்மஹத்தி செய்துகொள்ளுவதற்கொப்ப மணந்துகொண்டதன் பலன் இதுதானு... என்று மனம் புண்ணுகித் துடித்தது. "இத்தனைக்கும் காரணம் என் மதியீனமல்லவா! இத்தகைய பேரவமானத்தை எப்படிச் சகிப்பது" என்னெதிரிலேயே என்னை இத்தனை இகழ்ந்தும் அவமதித்தும் நான் செய்த[illegible] எடுத்து இடித்துக்காட்டிப் பேசிய ராக்ஷஸி எதற்குத்தான் அஞ்சுவாள்! ஐயோ, விதியே! என் காலக்கொடுமை இப்படியா ஆகிவிட்டது. [illegible]பாவதிக்கு நான் செய்த சதிக்கு இது ப்ரதிபலனு! என்று அனலில் பட்ட புழுகெனத் துடித்தபடியே ஓர் சோபாவில் சாய்ந்தான். அவன் மூளை கிறுகிறுவென்று சுற்றுவதுபோல் தோன்றியது.

183083

வை. மு. கோ. 57-வது நாவல்

கலா நிலயம்

பல வர்ணங்களில்

11 அழகிய படங்களுடன் கூடியது ரூ. 1—12—0

IV. விசேஷக் கட்டுரைகள்.
22. கேப்டன் என். சேஷாத்ரிநாதன், எம்.பி.பி.எஸ்., டி.டி.எம்.,
23. எஸ். அம்புஜம்மாள்,
24. சகோதரி. ஆர். எஸ். சுபலக்ஷ்மியம்மாள், பி.ஏ., எல்.டி.
25. "குமுதினி"
26. கே. ஸாவித்ரி அம்மாள்,
27. ஜி. ரங்கஸ்வாமி ஐயங்கார், எம்,ஏ., எம்.எல்.
28. எம். ஸி. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ., பி.எல்.

V. வாழ்க்கைக் குறிப்புகள்.
29. ஜெ. ர. ரங்கராஜுகாரு
30. தங்கம்மாள் பாரதி
31. "சசி தேவி"
32. எம். லக்ஷ்மியம்மாள், எம்.ஏ., எல்.டி.

VI. சங்கீதம், காலக்ஷேபம், ஸினிமா.
33. காயனபடு கீர்த்தனபடு ஸி. ஸரஸ்வதிபாய்,
34. வித்யாசுந்தரி பங்களூர் நாகரத்னம்மாள்,
35. பாபநாசம் சிவன்,
36. ஸ்ரீ. ஞானம்மாள்,
37. எம். கே. தியாகராஜ பாகவதர்.

VII. நாடகம்.
38. வி. ஸ்ரீ. நாராயணன்,
39. பி. ஆர். ராஜசூடாமணி, (குழந்தைகளுக்கு)

VIII. கவிதை மலர்கள்.
40. ஸ்வாமி சுத்தானந்த பாரதி,
41. "மைத்ரபர்"
42. "இனியன்"

IX. கண்ணைக்கவரும் சித்திரங்கள்.
43. எம். சாமுவேல்,
44. ஏ. வி. ராகவன்,
45. "வாஸந்தி"
46. பத்மா கிருஷ்ணஸ்வாமி
47. "சுமித்ரா தேவி"

திருவல்லிக்கேணி ஆபீஸில்
சென்னை நேயர்கள் கூபனையும், பணத்தையும்
நமது ப்ரதிநிதியிடம் கொடுத்து ரசீது பெறலாம்.
● காலை 8-மணி முதல் மாலை 8-மணி வரை

"பிரார்த்தனை"

ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் ஒரு முழு நாவல் வெளிவருவதுபோல்—சென்ற மலரில் "க்ருபாமந்திர்" வெளியானதுபோல்—பல அழகிய படங்களுடன் இம்முறை "பிரார்த்தனை" என்னும் மகுடத்துடன் ஒரு முழு நாவலை மோகினி, மலரில் தாங்கிவந்து உங்களுக்குச் சமர்ப்பித்து மகிழ்விப்பாள்.

காகிதப் பஞ்சகாலத்தில் அதிகரித்த கட்டுரைகளுடனும், படங்களுடனும் சிறந்த முறையில் மிகுந்த செலவில் வெளிவருவதால் மலரின் விலை ரூ. 2-8-0 வைக்கவேண்டியிருக்கிறது. இருப்பினும் அன்பர்களுக்கு ப்ரத்யேக சலுகையுடன் (குறைந்த விலை திட்டம் கூபனுடன் காண்க) கொடுத்து மகிழவேண்டுமென்கிற ஆவலால் இம்முறை இப்போது முதலே மலர் வேலையைத் துவங்கிவிட்டோம். பகவானின் திருவடித் தாமரைகளுக்குச் சமர்ப்பித்து இன்புறும் வண்ணம் மலரை அமைத்துக்கொடுக்க அவனடி தொழுது வேண்டுகிறேன்.

வழக்கம்போல் தங்கள் ஆதரவைக் கோரும்

வை. மு. கோதைநாயகி

'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் டீ

M. N. K—15 TM.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.